**<u>ம.அ.2.ந.க.எண்.இ1/1155/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.04.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.310/2013 **பொருள் எண் : 01**

**<u>பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவு கூடம் இடிக்க அனுமதி</u>**

| வரிசை எண் | மண்டலம்–2 | வார்டு–20 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–2, வார்டு–20, சீனிவாச பெருமாள் கோயில் தெருவில் உள்ள பழைய கல்நார் கூரையிலான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக்கூடம் |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 41.86 சதுர மீட்டர், தரைதளம் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 144.84 சதுர மீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.5,135/– |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | உள்ளது. |
| 7. | அந்த கட்டிடம் இடிப்பதற்கு பின்பு அவ்விடத்தில் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? | புதியதாக மீண்டும் சத்துணவுக்கூடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் ? | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவுக் கூடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் மூலதன நிதியில் புதியதாக சத்துணவுக்கூடம் கட்டுவதற்கு. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார் ? | 20வது வார்டு மாமன்ற உறுப்பினர் |
| 10. | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் மற்றும் நாள் | 2வது மண்டல வார்டு குழு தீர்மான எண் .16/12, நாள் 30.08.2012 |

எனவே, மண்டலம் –2, வார்டு–20ல் சீனிவாச பெருமாள் கோயில் தெருவில் உள்ள பழைய கல்நார் கூரையிலான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சத்துணவு கூடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“15.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.17/2013, நாள் 15.05.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“17.5.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 193/2013 நாள் 17.5.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>மி.து.ந.க.எண்.அ1/5656/2012</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்21.03.2013 நாளிட்டகுறிப்பு</u>**

தீர்மான எண்.311/2013 **பொருள் எண்.02**

**<u>சென்னை மாநகராட்சி விரிவாக்கம் – கொட்டிவாக்கம் ஊராட்சி – சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது – தினக்கூலி உயர்த்தி வழங்க அனுமதி</u>**

திருவாளர்கள்.டி.ராமமூர்த்தி மற்றும் திரு.பி.ஈஸ்வரைய்யா, தினக்கூலி தொழிலாளர்களின் கடிதத்தின்படி கொட்டிவாக்கம் ஊராட்சி மின்துறையில் நாள் ஒன்றுக்கு ரூ.302/– வீதம் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள். தற்பொழுது கொட்டிவாக்கம் ஊராட்சி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு மண்டலம்–14ல் இயங்கி வருகிறது. மனுதாரர்கள் தங்களின் கடிதத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 22.06.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி 2012–2013ஆம் ஆண்டிற்கான உயர்த்தப்பட்ட தினக்கூலி ரூ.302/–லிருந்து ரூ.346/–ஐ 1.4.2012 முதல் நிலுவைத் தொகையுடன் வழங்க கோரியுள்ளார்கள்.

மண்டலம்–14, வார்டு குழு தீர்மான எண்.699, 27.09.2012 நாளில் மாவட்ட ஆட்சியரின் 22.06.2012 நாளிட்ட ஆணையின்படி பல்வேறு தினக்கூலி பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள தினக்கூலியினை வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுகுறித்து கோப்பு கருத்துருக்காக 09.01.2013 அன்று பொதுத்துறைக்கு அனுப்பப்பட்டது.

துணை ஆட்சியர் (நிர்வாகம்) அவர்களின் குறிப்பில் இந்நிகழ்வு தொடர்பாக நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெரும்பொருட்டு நிதி ஆலோசகர் மூலமாக நேரடியாக கோப்பினை சமர்ப்பித்து மேல் நடவடிக்கை தொடர அறிவுறித்தியுள்ளார்.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.சி2/13052/12, 22.06.2012 நாளிட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள மின்துறை சார்ந்த தினக்கூலி பணியாளர்களுக்கு தினக்கூலி உயர்த்தி பிறப்பித்த ஆணையை சென்னை மாநகராட்சியிலும் அமுல் படுத்தவும், அதன்படி நிலுவைத்தொகையினை வழங்கவும் நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனகுழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.4.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.139/2013 நாள்.17.4.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனகுழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘19.04.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.164/2013 நாள்.19.04.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனகுழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண். எல்இ4/797/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.4.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.312/2013 பொருள் எண். 03

**<u>தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு மாற்று இடமாக மண்டலம்—8, வார்டு—107, மங்களபுரம் சேத்துப்பட்டில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூடத்தினை தற்காலிகமாக மாத வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்ய அனுமதி</u>**

26.02.2013 நாளிட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளரின் கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு மாற்று இடமாக மண்டலம்—8, வார்டு—107, மங்களபுரம் சேத்துப்பட்டு சென்னை—31ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூடத்தினை தற்காலிகமாக மாத வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுள்ளது.

8வது வார்டு குழு தீர்மான எண்.81 நாள்—18.03.2013—ல் மேற்படி இடத்தில் உள்ள சென்னை மாநகராட்சி உடற்பயிற்சி கூடத்தினை மாத வாடகை அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளது. மேலும், 22.04.2013 நாளிட்ட 8வது மண்டல அலுவலரின் குறிப்பில் மேற்படி இடத்தின் பரப்பளவு 82.30 சதுர மீட்டர் அதில் கட்டிடத்தின் அளவு 25.20 சதுர மீட்டர் என தெரிவித்துள்ளார்.

எனவே, மண்டலம்—8, வார்டு —107ல் உள்ள 82.30 சதுர மீட்டர் மற்றும் அதில் உள்ள கட்டிடத்துடன் கூடிய உபயோகமற்ற உடற்பயிற்சி கூடத்தினை மன்றம் பின்னர் நிர்ணயிக்கும் மாத வாடகை மற்றும் 12 மாத முன்பண வாடகை செலுத்த வேண்டும் என்றும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யயிருப்பின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நியாய விலை கடை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.233/2013 நாள்.20.05.2013—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"பொது மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.5.00 என்று நிர்ணயம் செய்யலாம் என்றும், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக நியாய விலை கடைகள் ஒதுக்கீடு செய்யும்போது மாத வாடகை ரூ.5.00 என்றே நிர்ணயம் செய்யலாம் என்ற பெரும்பான்மை மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலும் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.''

*******

**ம.அ.1.ந.க.எண்.இ1/1348/03/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.313/2013 **பொருள் எண்.04**

மண்டலம் 1 – துப்புரவு பணி மேற்கொள்ளுதல் – பகுதி1ல் கோட்டம் 10 முதல் 14 வரை தேவைப்படும் பணியாளர்கள் 370 எண்ணிக்கை தனியார் ஏஜென்சி மூலம் நியமிக்க அனுமதி வேண்டி.

***

01.பணியின் பெயர்:

| வ. ஏண் | மண்டலம் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 1 | 10 முதல் 14 வரை | மண்டலம் 1 பகுதி 1, வார்டு எண்.10 முதல் 14 வரை தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் 370 தொழிலாளர்கள் அமர்த்தி 12 மாத காலத்திற்கு துப்புரவு பணி | 398.4 |

02. மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் : ஆணையர் அவர்களின் ஒப்புதல் தீர்மானஎண். நாள். 06.3.2013 மன்ற தீர்மான எண்.160, நாள் 06.03.2013
03. திட்ட குறியீட்டு எண். : பொருந்தாது
04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை : 39839750.00
அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு — இது சேவைப் பணி அலுவலக விலை விகிதம் பொருந்தாது. 2012–2013
- அ) பணியின் செலவினம் : 39839750.00
- ஆ) மேற்பார்வை செலவு : –
- இ) சில்லரை மேற்பார்வை செலவு : –
- ஈ) மற்ற எதிர்பாரா செலவு : –.
- உ) மின்சாரம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் : – –
- **மொத்தம்** : 39839750.00

05. எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது நாள் :
1. சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள் 14.03.2013
2. இந்தியன் எக்ஸ்பிரஸ்,14.03.2013
3. நமது எம்.ஜி.ஆர். நாள்14.03.2013

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 20.03.2013
07. ஒப்பந்தப் புள்ளி ஏற்று கொள்வதற்கான கடைசி நாள் : 22.03.2013
08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 7 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லையெனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : ஆம்
09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டது ? : ஒப்பங்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டன.
10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டது : 2

மேற்கண்ட இவ்வொப்பம் 08.03.2013 அன்று கோரப்பட்டதில் பங்கேற்ற ஒப்பந்ததாரர்கள் குறைவான ஒப்பத் தொகை (EMD) செலுத்தியதால் ஒப்பம் ரத்து செய்யப்பட்டு மீண்டும் ஒப்பம் கோரப்பட்டது.

22.03.2013 அன்று நடைபெற்ற ஒப்பம் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக ஒப்பந்த கால அறிவிப்பின் மூலம் கோரப்பட்டது. அவை பின்வருமாறு

இ–டெண்டர் முறையில் மூன்று (Downloaded from Internet ) ஒப்பம் மட்டுமே பெறப்பட்டது. ஒப்ப நாளான 22.03.2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு

- பெல்கான் (கம்பெனி) செக்யூரிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
- பெசிகாம் கார்ப்பரேட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்

தொழில் நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்ததில். திருவாளர் பெல்கான் (கம்பெனி) செக்யூரிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் பெசிகாம் கார்ப்பரேட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததில் அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டதால் இந்த ஒப்பங்கள் தகுதிவாய்ந்த ஒப்பங்களாக கருதி ஒப்பந்ததாரரின் ஒப்பத்தின் நிதி ஆவணம் **18.04.2013** அன்று காலை **2.00** மணிக்கு திறக்கப்பட்டதன் அடிப்படையில் விலைப்புள்ளி ஒப்பீட்டு விவரம் கீழ்வருமாறு

| வ. எண் | ஒப்பந்ததாரர்கள¦ பெயர் | பணியின் அலுவலக மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | **2012–2013** ம் ஆண்டு விலைப்படி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| **1** | பெல்கான் (கம்பெனி) செக்யூரிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் | **398.40** | (ஒரு நபருக்கு ரூ.**348.12** x 365 நாட்களுக்கு x 370 தொழிலாளர்களுக்கு ) ரூ.**47013606.00** | (+) **18.01** % அதிகம் |
| **2** | பெசிகாம் கார்ப்பரேட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் | **398.40** | (ஒரு நபருக்கு ரூ.**295/–** x 365 நாட்களுக்கு x 370 தொழிலாளர்களுக்கு ) ரூ.**39839750.00** | சமமாக உள்ளது. |

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர் பெசிகாம் கார்ப்பரேட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் அவருடன் உடனடியாக விலைக்குறைப்புக்கு அழைக்கப்பட்டது. குறைந்த ஒப்பத்திற்கான திருவாளர் பெசிகாம் கார்ப்பரேட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் **18.04.2013** அன்று நாளிட்ட கடிதத்தில் நான் ஒப்பம் கோரும் போது அலுவலக மதிப்பிற்கு சமமாகவே ஒப்பத் தொகை கோரியிருந்தேன். (ஒரு நபருக்கு ரூ.**294/–** x 365 நாட்களுக்கு x 370 தொழிலாளர்களுக்கு ஆகும் மொத்த தொகை ரூ.**3,97,04,700/–** எனவே மேலும் விலைக்குறைக்க இயலாது என தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

மேலும் **22.04.2013** அன்று நடைபெற்ற ஒப்பங்கள் ஏற்கும் குழுமத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1) இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர் பெசிகாம் கார்ப்பரேட் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு **2012–2013**ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பைவிட **(–) 0.33** % குறைவாகும். ஒப்பத் தொகை ரூ.**3,97,04,700/–**க்கு பணி வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி பணி ஆணை வழங்கவும்
2) மேலும் இப்பணியின் அவசர அவசியத்தை கருதி பணிகளை மேற்கொள்ளவும்,

எனவே மேற்கண்ட**1** மற்றும் **2** இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**17.5.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.**192/2013** நாள்.**17.5.2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**20.05.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.**224/2013** நாள்.**20.05.2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘தற்காலிக தூய்மைப் பணியாளர்கள் ஒவ்வொரு நாளும் எத்தனை சாலைகள் எவ்வளவு நீளத்திற்கு சுத்தம் செய்துள்ளார்கள் என்ற விவரம் பதிவு செய்ய வேண்டும். அந்த பகுதியில் **10** பொது மக்களிடம் கையொப்பம் பெற வேண்டும் என்ற நடைமுறையை பின்பற்ற வேண்டுமென்றும், இதனை ஒப்பந்ததாரருக்கு தெரியபடுத்தவும், அதன் பிறகே ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.’’

**ம.அ.1/ம.சு.அ.1/ந.க.எண்.எச்1/1711/2013**

**முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் 10.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.314/2013 பொருள் எண்.05

**ஒப்பம் – 2012–13 – மண்டலம்–1, பகுதி–1, 2, மற்றும் 3, வார்டு–1 முதல் 14 வரை, ஒப்பம் பெறப்பட்டது – ஒப்பந்ததாரர் திரு. எஸ்.மணி அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி**

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | மண்டலம்–1, திருவொற்றியூர் , வார்டு–1 முதல் 14 வரை பொது சுகாதார துறையில் 256 ஆண் தொழிலாளர்கள் கொண்டு மேல்நிலை தொட்டிகளில் மருந்து இடும் பணி, கால்வாய்களில் ஆகாய தாமரை செடிகளை அகற்றும் பணி மற்றும் பக்க கால்வாய்களில் அடைப்பினை நீக்கி கைத்தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மற்றும் புகை தெளிப்பான் மூலம் புகை பரப்பும் பணி (12 மாத காலத்திற்கு) |
| 2 | மதிப்பீட்டின் எண்./குழுவின்/ மன்றத்தின் தீர்மான எண்./ நாள் | முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்: 11.03.2013 மன்றத்தின் தீர்மான எண்:204/2013 நாள்: 26.04.2013 |
| 3 | திட்டக் குறியீட்டு எண். | பொருந்தாது |
| 4 | ஒப்புதல் பெற்ற மதீப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு. | ரூ. 2,70,04,160/– 2012 – 2013ம் ஆண்டின் விலை விவரப்படி |
| | பணியின் மொத்த செலவினம் | ரூ. 2,70,04,160/– |
| 5 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் 28/03/2013 |
| 6 | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 10/04/2013 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 12/04/2013 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | ஆம் |
| 9 | பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா அ)வரவு செலவு திட்டத் தலைப்பு | பராமரிப்பு நிதியின் கீழ் |

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக ஒப்பந்தகால அறிவிப்பு

மூலம் கோரப்பட்டது அவை பின்வருமாறு.

இ–டெண்டர் முறையில் 4 (downloaded from internet) ஒப்பம் மட்டுமே பெறப்பட்டது.

ஒப்ப நாளான 12/04/2013 அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள்திறக்கப்பட்டது அதன் விவரம் கீழ் வருமாறு.

1) திரு.எஸ். பார்த்திபன்
2) திரு. S. மணி
3) திரு.எஸ். அரிகிருஷ்ணன்
4) திருவாளர். அண்னை எர்த் மூவர்ஸ்

தொழில் நுட்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட 4 ஒப்பந்ததாரர்களின் ஒப்ப ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் திரு.எஸ்.பார்த்திபன் அவர்கள் தகுதி இல்லாத காரணத்தினாலும் திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ் இப்பணியில் முன் அனுபவம் இல்லாத காரணத்தினால் இவ்விரு ஒப்பங்களும் நிராகரிக்கப்பட்டு, திரு.எஸ்.மணி மற்றும் திரு.எஸ். அரிகிருஷ்ணன் ஆகிய இருவரின் ஒப்பங்களில் அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டதால் தகுதி வாய்ந்த ஒப்பங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தின் நிதி ஆவணம் **18/04/2013** அன்று காலை **11.00**மணிக்கு திறக்கப்பட்டதின் அடிப்படையில் விலைப்புள்ளி ஒப்பீட்டு விபரம்

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேறறவர் பெயர் | பணியில் அலுவலக மதிப்பு 5 (அ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | 2012–2013 விலை விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. S. மணி | ரூ. 2,70,04,160/– | ரூ.2,51,35,360.00 | (–)6.92 % குறைவு |
| 2 | திரு. S. அரிகிருஷ்ணன் | ரூ. 2,70,04,160/– | ரூ.2,56,96,000.00 | (–)4.84 % குறைவு |

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். எஸ்.மணி அவர்களுடன் உடனடியாக விலை குறைப்புக்கு அழைக்கப்பட்டது. குறைந்த ஒப்பத்திற்கான திரு.எஸ். மணி அவர்கள் **19.04.2013** நாளிட்ட கடிதத்தில் தனது ஒப்பத் தொகை ரூ.**269**/–ல் இருந்து மேலும் விலைக் குறைப்பு வழங்க இயலாது எனத் தெரிவித்துள்ளார்.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திரு. எஸ். மணி அவர்களுக்கு **2012–2013**ம் ஆண்டின் விலை விவரப் பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட **(–)6.92** % குறைவான ஒப்பத்தொகை ரூ.**2,51,35,360/–**க்கு (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து ஒரு லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்) பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன் படி நிலைக்குழுக்கள் (சுகாதாரம்), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**16.05.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.**50/2013**, நாள்.**16.05.2013**ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**17.5.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **194/2013** நாள்.**17.5.2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**20.05.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.**225/2013** நாள்.**20.05.2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.4.ந.க.எண்.பி2/ 7022/சிப்பம்–2ஏ/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.315/2013 பொருள் எண். 06

**மண்டலம் – 4 – "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" (Chennai Mega City Develoment Mission) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – சிப்பம் – 2ஏ குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் 2011–12 ஆம் ஆண்டில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் தொடர்ச்சியாக தற்போது 2012 – 13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் தண்டையார்பேட்டை மண்டலத்தில் (மண்டலம் – 4) 31.567 கி.மீ. நீளமுள்ள 116 சாலைகளில் 21.24 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு மூன்று முறை ஒப்பம் கோரியதில் எந்த ஒப்பந்ததாரரும் ஒப்பத்தில் கலந்து கொள்ளவில்லை மேலும் இப்பணிக்கான சிப்பம்–2ல் சாலைகள், மழைநீர்வடிகால்வாய், நடைபாதைகள், சேவைத்துறை பயன் பாட்டிற்கான ஓரப்பாதைகள் சாலை மின் விளக்கு மற்றும் சாலை குறித்த அறிவிப்பு பலகை ஆகிய பணிகள் உள்ளன. இதனால் சாலை துறையில் உள்ள அனுபவமிக்க ஒப்பந்ததாரர்கள் மழைநீர் வடிகால்வாய் பணியின் காரணமாகவும், இதே போல் கட்டிடத்துறையில் அனுபவமிக்க ஒப்பந்ததாரர் சாலை பணிகளின் காரணமாகவும் இப்பணிக்கு எந்த ஒப்பந்ததாரரும் ஒப்பம் எடுக்க முன்வரவில்லை. இதனால் இத்திட்டத்தின் பயன்பாட்டினை பொதுமக்களுக்கு எடுத்து சொல்ல காலதாமதமாகும் என்பதால் மேற்கண்ட சிப்பம்–2க்கான மதிப்பீட்டு பணியை அதன் தன்மைக்கேற்க பிரித்து சிப்பம்–2ல் மொத்த ஒப்ப தொகை ரூ.10,42,99,704.11ல் சாலைகள் மற்றும் சாலை குறித்த அறிவிப்பு பலகை ஆகிய பணிகளுக்கான ஒப்பத்தொகை ரூ.3,69,93,106.18க்கு ஒரு சிப்பமாகவும் மழைநீர்வடிகால்வாய், நடைபாதைகள்,சேவைத்துறை பயன் பாட்டிற்கான ஓரப்பாதைகள் மற்றும் சாலை மின் விளக்கு ஆகிய பணிகளுக்கான ஒப்பத் தொகை ரூ.6,73,06,597.93க்கு மற்றோறு சிப்பமாகவும் இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

<u>சிப்பம் 2 ஏ– 24 சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 4ல் உள்ள 24 சாலைகளை மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ. 369.94 இலட்சங்கள்.ஒப்பந்த அறிவிப்பு ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ் நாளிதழ், சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள்.18/04/2013ல் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 30/04/2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**சிப்பம்– 2ஏ**

1, திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன்

2,ஸ்ரீகற்பகம் கன்ஸ்ட்ரக்சஷன்

3,யு.பி.ராமைய்யா

4,எஸ்.எம்.எண்டர்பிரைசஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் –2ஏ,ல் கலந்து கொண்ட நான்கு ஒப்பந்ததாரர்களும் ஒப்பத்துடன் இணைத்துள்ள ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் ஒப்பவிதிகளின் படி நான்கு ஒப்பங்களும் தகுதிவாய்ந்த ஒப்பமாகும். தகுதி வாய்ந்த நான்கு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 07/04/2013 அன்று திறக்கப்பட்டது.

**சிப்பம் 2ஏ**

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் | ரூ.3,69,93,106.18 | ரூ.3,21,98,202.35 | (–)12.96% குறைவு |
| 2 | யு.பி.ராமைய்யா | ரூ.3,69,93,106.18 | ரூ.3,46,81,752.20 | (–)6.24% குறைவு |
| 3 | ,ஸ்ரீகற்பகம் கன்ஸ்ட்ரக்சஷன் | ரூ.3,69,93,106.18 | ரூ.3,48,93,978.18 | (–)5.67% குறைவு |
| 4 | எஸ்.எம்.எண்டர்பிரைசஸ் | ரூ.3,69,93,106.18 | ரூ.3,60,16,687.21 | (–)2.63% குறைவு |

சிப்பம்–2ஏ க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்கள் 09/05/2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையில் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.3,21,98,202.35–ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட <u>(–) 12.96%</u> விழுக்காடு குறைவாகும். 04/05/2013 நாளிட்ட சந்தை விலையான <u>ரூ.3,80,70,640.53/–</u> உடன் ஒப்பிடுகையில் <u>(–) 15.42%</u> விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 4 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.3,21,98,202.35/–ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த தொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட <u>(–) 12.96%</u> விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் <u>(–) 15.42%</u> விழுக்காடு குறைவாகும்..

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட <u>(–) 12.96%</u> குறைவுக்கு ஒப்பத்தொகை ரூ.3,21,98,202.35/–க்கு பணியை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை 10/05/2013 அன்று விரிவாக விவாதித்து பரிந்துரை வழங்கியது.

சென்னை மாநகரில், அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரில் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலம் சென்னை மாநகரம் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன்அவர்களின் ஒப்பத்தொகை ரூ.3,21,98,202.35/–ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பானது என்னவென்றால் சென்னை மாநகரில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகிதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது
4) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 12.96% விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 15.42% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.3,21,98,202.35/– 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (–) 12.96% குறைவு மற்றும் சந்தைவிலையைவிட (–) 15.42% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம் –2ஏ க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.3,21,98,202.35/–க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட பணிக்கான ஒப்பத்தினை திருவாளர். ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சஷன் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 12.96% குறைவு ஒப்பத்தொகை ரூ.3,21,98,202.35/–க்கு பணியை ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி வழங்கவும்

- பணியின் அவசர மற்றும் அவசிய தன்மையை கருதி இப்பணிக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பணியாணை வழங்கவும்.

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.5.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 202/2013 நாள் 17.5.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 232/2013 நாள் 20.05.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/ 2176 /2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 07.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.316/2013 பொருள் எண்.07

**மண்டலம்–9 –''சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம்'' 2வது கட்டம் (Chennai Mega City Development Mission-Phase-2) சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது – சிப்பம்–1 – பின்னேற்பு அனுமதி.**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் தேனாம்பேட்டை மண்டலத்தில், (மண்டலம்-9) 6.44 கி.மீ. நீளமுள்ள 33 சாலைகளில் ரூ.5.71 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தயாரிக்கப்பட்ட ஒரு சிப்பமாக பிரிக்கப்பட்ட 33 சாலைப் பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

<u>சிப்பம் 1 – 33 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம்–9ல் உள்ள 33 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.570.982 இலட்சங்கள் ஆகும்.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.5.71 கோடிக்கு **முதல் முறையாக** ஒப்பம் கோரப்பட்டதில் ஒப்பந்த அறிவிப்பின்படி (6.12.2012) அன்று நான்கு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டார்கள் அவர்களில் குறைந்த ஒப்பம் கோரிய திருவாளர்கள் . வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் சமர்பித்த விலை புள்ளி விவரம் வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013 ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சென்னை. | 5,50,17,631.84 | 6,05,88,901.80 | (+) 10.13% அதிகம் |

திருவாளர்கள் வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சென்னை அவர்கள் அலுவலக விலையை விட + 10.13 சதவீதம் கூடுதலாக ஒப்பம் கோரினார்கள். எனவே விலை குறைப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டது அதன் தொடர்ச்சியாக விலை குறைப்பு செய்து 5,92,89,801.80 (+7.76) சதவிதத்திற்க்கு பணி செய்ய கடிதம் கொடுத்தார்கள். மீண்டும் விலை குறைப்பு கேட்டு கடிதம்

அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் மேலும் விலை குறைப்பு செய்ய முடியாத நிலை உள்ளதை தெரிவித்து கடிதம் அனுப்பினார்கள். எனவே மறு ஒப்பம் கோரப்பட்டது.

**இரண்டாவது முறையாக** கோரப்பட்ட ஒப்பந்த அறிவிப்பின்படி மூன்று ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் கலந்து கொண்டனர் அவர்களில் திரு.யு.பி ராமைய்யா அவர்கள் குறைந்த விலை புள்ளி சமர்பித்தார்கள். அதன் விவரம் வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013 ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. யு. பி. ராமைய்யா, | 5,50,17,631.84 | 6,31,44,864.00 | (+) 14.77% அதிகம் |

குறைந்த ஒப்பம் கோரிய திரு.யு.பி.ராமைய்யா அவர்கள் அலுவலக மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக (+14.77%) கோரினார்கள். விலை குறைப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டதில் விலை குறைப்பு செய்ய மறுத்த காரணத்தால் ஒப்பம் ரத்து செய்து மறு ஒப்பம் கோரப்பட்டது.

**மூன்றாம் முறையாக** கோரப்பட்ட இப்பணிக்கான ஒப்பந்த அறிவிப்பு **21.02.2013** அன்று ஆங்கில நாளிதழ் – இந்தியன் எக்ஸ்பிரஸ் **(21–02–2013)** தமிழ் நாளிதழ் – நமது எம்.ஜி.ஆர் **(21–02–2013)** மற்றும் **21.02.2013** அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான **01.03.2013** அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒப்பத்தில் கலந்து கொண்டவர் பற்றிய விவரம் கீழ்வருமாறு,

1.திரு. யு.பி.ராமைய்யா.,

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம்–1ல் கலந்து கொண்ட திரு.யு.பி.ராமைய்யா, அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த ஒற்றை ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் **08.03.2013** அன்று திறக்கப்பட்டது.

**சிப்பம் 1**

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013 ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. யு. பி. ராமைய்யா, | 5,50,17,631.84 | 6,12,58,073.80 | (+) 11.34% அதிகம் |

சிப்பம்–1 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு. யு. பி. ராமைய்யா, அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு. யு. பி. ராமைய்யா, அவர்கள் **18.03.2013** நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையிலிருந்து **(-) 3.00%** விழுக்காடு விலை குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். மேலும் ஒப்பந்ததாரர் திரு.யு.பி.ராமைய்யா அவர்களிடம் இரண்டாம் கட்டமாக விலை குறைப்பு கோரப்பட்டது. அதற்கு திரு.யு.பி.ராமைய்யா அவர்களின் **16.04.2013** நாளிட்ட கடிதத்தில் மேற்படி பணியின் ஒவ்வொரு இனங்களுக்கும் தனித்தனியாக விலை குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். அதன் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட விலை குறைப்புக்குப் பின்னர், திரு.யு.பி.ராமைய்யா அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**5,82,92,130.30** ஆகும். மூன்றாம் கட்டமாக திரு.யு.பி.ராமைய்யா அவர்களிடம் விலைகுறைப்பு கோரப்பட்டது. திரு. யூ. பி. ராமைய்யா அவர்களின் **26.04.2013** நாளிட்ட கடிதத்தில் மேற்படி பணியின் ஒவ்வொரு இனங்களுக்கும் தனித்தனியாக விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். அதன் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்ட விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்குப்பின்னர் திரு. யு. பி. ராமைய்யா அவர்களின் ஒப்பத் தொகை ரூ. **5,77,57,246.90** ஆகும். இவ்வொப்பத் தொகையான **2012–13** ஆம் ஆண்டின் விலைவிவரப்பட்டியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **4.98%** விழுக்காடு அதிகமாகும். இது சந்தை விலை ரூ. **6,17,31,260.64** (கட்டிடம், சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் தேதி

20.04.13,13.04.2013 மற்றும் மின்சாரம் தேதி 08.12.2012) உடன் ஒப்பிடுகையில் (-) 6.46% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 9 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1 இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு. யு.பி. ராமைய்யா, அவர்களின் ஒப்பத்தொகை ரூ.5,77,57,246.90 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2 இத்திட்டத்தின் சிறப்பம்சமானது சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கினைந்த சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3 இவ்வொப்பத்தொகையானது 2012–2013 ம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 4.98% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 6.46% விழுக்காடு குறைவாகும்.

இந்த விவரங்கள் அனைத்தும் அட்டவணையாக சமர்ப்பிக்கப்படுகிறது.

பணியின் பெயர் : சிப்பம்–1 (33 சாலைப் பணிகள்)
சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம் 2வது கட்டம் (Chennai Mega City Development Mission – Phase-2) சென்னை மாநகராட்சி பகுதியில் உள் கட்டமைப்புப் பணிகள், கோட்டம்–119, பகுதி–24, மண்டலம்–9

| வ. எண். | பணியின் விவரம் | அலுவலக விலை 2012–13 | மொத்த ஒப்ப மதிப்பில் ஒவ்வொரு பணிகளின் சதவிகிதம் | ஒப்பந்ததாரரின் பெயர் திரு.யு.பி.ராமைய்யா | | விலைக்குறைப்புக் கான கடிதம் நாள்:26.04.2013 | | சந்தைவிலை நாள் : 13.04.2013 ,20.4.2013 மற்றும் 08.12.2012 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | % | தொகை | % | தொகை | % |
| 1 | சாலைப் பணிகள் | 22550626.90 | 40.98 | 22895351.20 | (+) 1.52 | 22551922.60 | (+) 0.005 | 24147451.90 | (–)6.607 |
| 2 | நடைபாதை பணிகள் | 19825948.45 | 36.04 | 24404208.60 | (+) 23.09 | 22327019.60 | (+) 12.615 | 24499007.97 | (–)8.86 |
| 3 | மின்வட கால்வாய் | 8395208.00 | 15.26 | 9231308.00 | (+)9.96 | 8395208.00 | 0 | 8395208.00 | 0 |
| 4 | மழைநீர் வடிகால்வாய் | 2013969.79 | 3.66 | 2380830.00 | (+)18.22 | 2214103.00 | (+) 9.937 | 2369474.22 | (–)6.557 |
| 5 | தெருவிளக்கு பணி | 737123.00 | 1.34 | 806485.00 | (+)9.41 | 773929.00 | (+) 4.99 | 840427.00 | (–)7.91 |
| 6 | தெரு கலன் பணி | 1494755.70 | 2.72 | 1539891.00 | (+)3.02 | 1495064.70 | (+) 0.02 | 1498180.62 | (–)0.21 |
| | மொத்தம் | 55017631.84 | 100.00 | 61258073.80 | (+)10.87 | 57757246.90 | (+) 4.98 | 61749749.71 | (–)6.46 |

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திரு.யு.பி.ராமைய்யா அவர்களுக்கு 2012–2013 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 4.98% அதிகமான ஒப்பத்தொகை ரூ. 5,77,57,246.90க்கு பணியினை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது .

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில், அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரில் ஒருங்கிணைந்த சாலைகளால் அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலம் சென்னை மாநகரம் புதிய பொலிவு பெறும்

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு.யு.பி.ராமைய்யா, அவர்களின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பத்தொகை ரூ.5,77,57,246.90ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2. இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகராட்சி ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள் அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள்,தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவிகிதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.
4. அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையை விட (+) 4.98 விழுக்காடு அதிகம் ஆகும். இது சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 6.46 விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், இரண்டாம் கட்ட விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர் யு.பி. ராமைய்யா, அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.5,77,57,246.90 2012–13 ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) 4.98 % அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (-) 6.46 % குறைவாக உள்ளதாலும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்–1 க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர் யு.பி. ராமைய்யா அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.5,77,57,246.90க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு யு.பி. ராமைய்யா, அவர்களுக்கு 2012–13 ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 4.98% அதிகமான ஒப்பத்தொகை ரூ5,77,57,246.90 க்கு பணி ஆணை வழங்கியமைக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.5.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.200/2013 நாள்.17.5.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.231/2013 நாள்.20.05.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>El.DC.No.EDP.C.No.C1/1054/2012</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23/04/2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.317/2013 **பொருள் எண்:08**

**<u>சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம் மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services வழங்குவதற்கான ஒப்பம் 05.04.2013 அன்று TECHNICAL BID திறக்கப்பட்டது – 19.04.2013 அன்று FINANCIAL BID திறக்கப்பட்டது – குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்பதற்கான ஒப்புதலுக்காக அனுமதி</u>**

| | |
|---|---|
| செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம், மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services வழங்க |
| தேவைப்படும் இடம் | ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம், மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) |
| **<u>ஒப்ப அறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட தேதி</u>** | |
| 1) மாநகராட்சி வெளியீட்டில் | 07.02.2013 |
| 2) பத்திரிக்கைகள் | 06.02.2013,Deccan Chronicle, மக்கள்குரல் |
| ஒப்ப நமூனா விற்பனைக்காக இறுதி நாள் | 03.04.2013 |
| ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் |
| ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் (ஒப்பம் திறக்கப்பட்ட நாள்) | 05.04.2013 |
| விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஒப்பப்படிவங்கள் www. tenders. tn. gov.in இணைய தளங்களிலிருந்தும் இறக்கம் செய்து கொள்ளப்பட்டது |
| பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | 3 |
| செலுத்தப்பட்ட ஒப்ப வைப்புத் தொகை | **ரூ. 1,50,000 / –** |
| **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் விவரங்கள்** | |

தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளி 05.04.2013 அன்று திறக்கப்பட்டன. பங்குப்பெற்ற நிறுவனங்கள் முறையே 1) M/s ACCEL FRONT LINE LTD, 2)M/s CMS INFO SYSTEM PVT LTD, மற்றும் 3) M/s IBM INDIA PVT LTD. இதில் M/s IBM INDIA PVT LTD ஒப்பந்த படிவம் வைக்கவில்லை. ஆதலால் தொழில்நுட்ப குழுமம் 08.04.2013அன்று மேலே குறிப்பிட்டுள்ள மூன்று நிறுவனங்களின் தொழில்நுட்ப pre-qualification criteria ஆய்வு செய்து அதில் M/s IBM India Pvt Ltd. ஒப்பந்த படிவம் சமர்ப்பிக்காததினால் அதனை தகுதி பெறவில்லை என சான்றளித்தனர். இத்துடன் தொழில் நுட்ப ஆய்வு அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆய்வு அறிக்கையின் படி M/s ACCEL FRONT LINE LTD மற்றும் M/s CMS INFO SYSTEM PVT LTD ஆகிய நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இரண்டு நிறுவனங்களின் விலை குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 19.04.2013 அன்று திறக்கப்பட்டன. இந்த இரண்டு நிறுவனங்களுக்கு விலை ஒப்பீடு செய்யப்பட்டன. ஒப்பிட்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

| வ. எ ண் | நிறுவனத்தின் பெயர் | பணி வ.எண் (A,B,C&D) கூட்டு தொகை | விற்பனை வரி | சேவை வரி | மொத்த தொகை (கூட்டு தொகை + சேவை வரி+ விற்பனை வரி) | துறையின் மதிப்பீட்டுத் தொகை ரூ | துறையின் மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுதல் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | M/s ACCEL FRONT LINE LTD | **10687050** | உள்ளிட்டது | 1320919 | **12007969** | **15000000** | (-)19.9 % குறைவு |
| 2 | M/s CMS INFO SYSTEM PVT LTD | **9909328** | உள்ளிட்டது | 1224793 | **11134121** | **15000000** | (-)25.7 % குறைவு |

| | |
|---|---|
| ஏற்கதக்க ஒப்பப்புள்ளி அளித்துள்ள நிறுவனம் | M/s CMS INFO SYSTEM PVT LTD நிறுவனம் குறைந்த ஒப்பபுள்ளி அளித்துள்ளது. |
| துறையால் விலை குறைப்பு கேட்கப்பட்ட விவரம் | M/s CMS INFO SYSTEM PVT LTD நிறுவனம் தனது 20.04.2013 நாளிட்ட கடிதம் மூலம் விலை குறைப்பு செய்துள்ளது. மீண்டும் இரண்டாவது முறை M/s CMS INFO SYSTEM PVT LTD நிறுவனத்திடம் விலை குறைப்பு கடிதம் மூலம் தெரிவித்ததற்கு, விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்தனர். |

| S.no | Description | M/s CMS INFO SYSTEM PVT LTD | |
|---|---|---|---|
| | | மொத்த தொகை (கூட்டு தொகை + சேவை வரி+ விற்பனை வரி) | விலை குறைப்பு |
| 1 | சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம் மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services | 11134121 | 11111514 |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | THIS TENDER QUOTED RATE | முந்தைய ஒப்பந்தபுள்ளி ஆறு மாத விலை (A) | முந்தைய ஒப்பந்தபுள்ளி ஒரு வருட விலை (B) = (A) x 2 | துறையின் மதிப்பீட்டுத் தொகை ரூ (C) | முந்தைய ஒப்பந்த விலையை (B) விட விகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு , | துறை மதிப்பீட்டுத் தொகை (C) விட விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | M/s ACCEL FRONT LINE LTD | - | 2855124 | 12236178 | 15000000 | | |
| 2 | M/s CMS INFO SYSTEM PVT LTD | 11111514 | 3262965 | | | (-)18.4% குறைவு | (-)25.9 % குறைவு |
| | | மொத்தம் | 6118089 | | | | |

| பரிந்துரைக்கப்படும் நிறுவனம் | M/s CMS INFO SYSTEM PVT LTD |
|---|---|
| செல்லத்தக்க காலம் | 90 நாட்கள் |
| ஆயத் தீர்வை | உள்ளிட்டது |
| உள்ளூர் வரிகள்/மத்திய விற்பனை வரிகள் | உள்ளிட்டது |
| பணி நிறைவு காலம் | ஒரு வருடம் |
| பிணை வைப்புத் தொகை | ரூ. 222250/ – |
| பணம் பட்டுவாடா | 30 நாட்கள் |
| உத்திரவாதம் | 1 வருடம் |
| செலவினம் பற்று வைத்தல் | இப்பணிக்கான செலவினத்தை இடிபி செல்லின் 2013–2014 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும் |
| உடன்படிக்கை | துறையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொள்முதல் ஆணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் செய்து கொள்ள வேண்டும். |

எனவே M/s CMS INFO SYSTEM PVT LTD நிறுவனத்தின் குறைக்கப்பட்ட குறைந்த ஒப்பப்புள்ளி ஏற்பதற்காக பரிந்துரைக்கப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம், மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services ஒரு வருடத்திற்கு வழங்குவதற்கான பணி ரூ **98,89,208/-** (வரிகள் தனி) i.e. ரூ.**1,11,11,514/–**(ரூபாய் ஒரு கோடியே பதினொரு லட்சத்து பதினொன்றாயிரத்து ஐந்நூற்று பதினான்கு மட்டும்) (வரிகள் உள்ளிட்டது) வீதம் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள M/s CMS INFO SYSTEM PVT LTD நிறுவனத்தின் ஒப்பத்தை ஏற்கவும்.
2. M/s CMS INFO SYSTEM PVT LTD நிறுவனத்திற்கு சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகத்தில் (வட்டார அலுவலகம் மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம் மருத்துவமனை மற்றும் இதர இடங்கள்) உள்ள அனைத்து கணினி மென் பொருள் மற்றும் வன் பொருள் Facility Management Services ஒரு வருடத்திற்கு வழங்குவதற்கான பணி ரூ. **1,11,11,514/–** (ரூபாய் ஒரு கோடியே பதினொரு லட்சத்து பதினொன்றாயிரத்து ஐந்நூற்று பதினான்கு மட்டும்) (வரிகள் உள்ளிட்டது) தொகைக்கு பணி செய்ய ஆணை வழங்கவும் மற்றும் ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்தம் முடிந்தபின் தேவைப்படின் மேலும் ஒரு வருட காலத்திற்கு உரிய அனுமதியுடன் நீட்டிக்கவும்
3. இந்த பணி செய்வதற்கான செலவினத்தை இ.டி.பி செல் 2013 – 2014 நிதி ஆண்டின் கீழ் மேற்கொள்ளவும்

எனவே மேற்கண்ட 1 முதல் 3 முடிய இனங்களுக்கு செயற்குறிப்புகளுக்கு ஒப்பங்கள் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) & (2) -ன்படி நிலைக்குழுகள்(பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘17.5.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 189/2013 நாள்.17.5.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.222/2013 நாள்.20.05.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண். பி5/1898/2009</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.318/2013 பொருள் எண்.09

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்க்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் 3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் 24 மாதங்கள், அதாவது 03.01.2013ற்குள் வரையாகும்.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், சிப்பம் 3 – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளில் பருவமழை, சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி தேர்தல், நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, போக்குவரத்துத்துறையின் அனுமதி, சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வது, மற்றும் மின்சார கம்பிவடங்கள் இடையூறுகள் போன்ற காரணங்களுக்காக இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால் மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு ஜூன்' 2013 வரை காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 04.01.2013 முதல் 30.06.2013 வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 3 மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு 04.01.2013 முதல் 30.06.2013 வரை ஆறு மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.5.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 197/2013 நாள்.17.5.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். .227/2013 நாள்.20.05.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1899/2009</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.319/2013 பொருள் எண்.10

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 4 – கூவம் கால்வாய், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் 4 கூவம் கால்வாய், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் 26 மாதங்கள், அதாவது 03.03.2013ற்குள் வரையாகும்.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், சிப்பம் 4 கூவம் கால்வாய், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்தேக்கப்பணிகள் உள்ள பகுதியில் போக்குவரத்து இடையூறுகள், சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் குழாய் இணைப்பு, மழைநீர் வடிகால்வாய் பகுதிகளில் மின்சார கம்பிவடங்களும் மற்றும் இணைப்பு பெட்டிகளின் இடையூறுகள் மற்றும் மணல் தட்டுபாடு ஆகியவற்றினால், கூவம் கால்வாய், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாமல் நடைபெற்று வருகிறது என்றும் தற்சமயம் வரை தங்கள் நிறுவனம் தொடர்ச்சியாக சில பிரச்சனைகள் எதிர்கொள்ள வேண்டியது இருப்பதாக கீழ்வருமாறு தெரிவித்துள்ளனர்.

(1) பொறியாளர்களுக்கு ஊதிய உயர்வு,
(2) பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்ந்துள்ளது,
(3) பணியமைப்புக்கான செலவினம் அதிகரித்துள்ளது,
(4) அரசு துறைகளில் பொதுவாக பிடித்தம் செய்யும் சேவை வரி 10.30% லிருந்து 12.36% உயர்ந்துள்ளது.

மேற்கூறிய காரணங்களினால் தங்கள் நிறுவனத்திற்கு செலவினம் ஒரு வருடத்திற்கு 6% முதல் 8% வரை அதிகரித்துள்ளது எனவும்,

கூவம் கால்வாய் மற்றும் விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் பணிகளுக்கு ஜூன் மாதம் வரை காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு 04.03.2013 முதல் 03.06.2013 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இன்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 4 கூவம் கால்வாய், விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு 04.03.2013 முதல் 03.06.2013 வரை மூன்று மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)யின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''17.5.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 198/2013 நாள் 17.5.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி.)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 228/2013 நாள் 20.05.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண். பி5/1901/2009</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.320/2013 பொருள் எண். **11**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 6 – வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர்தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. **814.88** கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி **06.07.2009** அன்று பெறப்பட்டு **12** நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.**774.60** கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு **12** நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் **6** வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு **04.01.2011** அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பக்காலம் **24** மாதங்கள், அதாவது **03.01.2013**ற்குள் வரையாகும்.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், சிப்பம் **6** வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்வழிக்கால்வாய்கள் அமைக்கும் பணிகளில் பருவமழை, சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி தேர்தல், நீர்வழிக்கால்வாய்களில் ஆக்கிரமிப்பு, போக்குவரத்துத்துறையின் அனுமதி, சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் கழிவுநீர் தொடர்ச்சியாக செல்வது, மற்றும் மின்சார கம்பிவடங்கள் இடையூறுகள் போன்ற காரணங்களுக்காக இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு ஜூன்' **2013** வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால் மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடுற்கும் **8** முதல் **10** மாதம் வரை கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

வேளச்சேரி மற்றும் அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாததாலும் இப்பணிகளுக்கு ஜூன்' **2013** வரை காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால், மூன்றாம் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு **04.01.2013** முதல் **30.06.2013** வரை ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் எஸ்.ஜி.எஸ். இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் **6** வேளச்சேரி மற்றும் அடையாறு கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு **04.01.2013** முதல் **30.06.2013** வரை மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு ஆறு மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''**17.5.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **199/2013** நாள்.**17.5.2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

> ''**20.05.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.**229/2013** நாள்.**20.05.2013**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/1369/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.321/2013 பொருள் எண்.12

**<u>அரசாணை அமலாக்கம்</u>**

அரசாணை எண். 127 நிதிப்(படிகள்)துறை, நாள். 19.04.2013–ல் பொது வருங்கால வைப்பு நிதிக்கான 2012–13ஆம் நிதியாண்டிற்கான வட்டி விகிதம் 01.04.2012 முதல் 8.8 சதவீதமாகவும் 2013–14 நிதியாண்டிற்கு 8.7 சதவீதமாகவும் நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டது. அரசு ஆணையின் விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**(Abstract)**

**PROVIDENT FUND – General Provident Fund (Tamil Nadu) – Rate of interest for the financial year 2012-2013 and 2013-2014 – Orders – Issued.**

---

**FINANCE (ALLOWANCES) DEPARTMENT**

**G.O.No.127** **Dated:--19--04--2013**
Chithirai, 6, Vijaya,
Thiruvalluvar Aandu, 2044.

**Read:**

1. G.O.Ms.No.106, Finance (Allowances) Department, dated: 30—03--2011.
2. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs, New Delhi letter No. 5(1)-B(PD)/2012, dated 22.05.2012.
3. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs, New Delhi letter No. 5(1)-B(PD)/2013, dated 08.04.2013.

===000===

**<u>ORDER:</u>**

The Government direct that the rate of interest on the accumulation at the credit to the following Provident Funds for the financial year 2012-2013 be 8.8% (Eight point Eight) per annum with effect from 01.04.2012 and for the financial year 2013 – 2014 be 8.7% (Eight point Seven) per annum with effect from from 01.04.2013.

(i) General Provident Fund (Tamil Nadu)
(ii) Pudukottai State Provident Fund
(iii) Travancore State Provident Fund
(iv) Travancore Contingent Employees Provident Fund

**2)** The rate of interest on belated final payment of Provident Fund accumulations remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as indicated in para 1 above.

எனவே, அரசாணை எண்.127, நிதித்(படிகள்)துறை, நாள் 19.04.2013னை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 226/2013 நாள் 20.05.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மக.கு.ந.க.எண்.அ8/526/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.322/2013 **பொருள் எண்.13**

**அரசாணை அமலாக்கம்**

அரசாணை எண்.103 நிதித் (படிகள்) துறை நாள்.01.04.2013ல் தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி விதி 15–B துணை விதி (1)ல் பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து திரும்பப் பெறும் (பகுதி இறுதித்தொகை) உச்சவரம்பு தொகை ரூ. 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம்)த்திலிருந்து ரூ.9,00,000/–(ரூபாய் ஒன்பது இலட்சம்) ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**(Abstract)**

**GENERAL PROVIDENT FUND – Withdrawal from the General Provident Fund – Maximum limit – Amendments to rule 15-B of General Provident Fund (Tamil Nadu) Rules – Issued – Notified.**

---

**FINANCE (ALLOWANCES) DEPARTMENT**

**G.O.No.103** **Dated:01--04--2013**
Panguni, 19, Nandhana
Thiruvalluvar Aandu, 2044.

**Read:**

1. G.O.Ms.No.33, Finance (Allowances) Department, dated: 21—01--1992.
2. G.O.Ms.No.381, Finance (Allowances) Department, dated: 30—09--2010.
3. From the Accountant General Letter No. Pr.AG(A&E) / FMI / I / 2012-13 / 145468 / 141, dated 26.10.2012.

===000===

**ORDER:**

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette.

NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India and of all other powers hereunto enabling the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the General Provident Fund (Tamil Nadu) Rules.

AMENDMENTS

In the said Rules. in rule 15-B in sub-rule (1), for the provisos, the following provisos shall be substituted, namely:-

‘’ Provided that in no case the maximum amount of withdrawal for the purposes specified in clauses (a), (b),(c) and (h) of rule 15-A Shall exceed Rs. 5,00,000/- (Rupees five lakh only) or 75 times of the monthly pay, whichever is less:

Provided further, that in no case the maximum amount of withdrawal for the purposes specified in clauses (d), (e), (f) and (g) of rule 15-A Shall exceed Rs. 9,00,000/- ( Rupees nine lakh only) or 75 times of the monthly pay whichever is less:

Provided also that in the case of a subscriber who has availed himself of an advance under the Scheme for the grant of advance for house building purpose. sponsored by the State or the Central Government or the Public or Private Financial Institutions, the sum withdrawn under this sub-rule together with the amount of advance taken under the afore-said Scheme or the assistance taken from the above said sources shall not exceed Rs. 25,00,000/- (Rupees twenty five lakh only)''

எனவே, 01.04.2013 நாளிட்ட அரசாணை எண்.103 நிதித்(படிகள்)துறை, சென்னை மாநகராட்சிக்கும் பொருந்தும் என்பதால், சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''**20.05.2013** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். **220/2013** நாள் **20.05.2013**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பொ.து.ந.க.எண்.பி13/20544/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.323/2013 **பொருள் எண்.14**

**<u>அரசாணை அமலாக்கம்</u>**

அரசாணை எண்.147, நிதி (ஓய்வூதியத் துறை, நாள் : 03.05.2013ன் படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.2013 முதல் 72 விழுக்காட்டிலிருந்து 80 விழுக்காடாக உயர்த்தி திருத்திய அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படி 01.01.2013 முதல் ரொக்கமாக வழங்கப்பட வேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் எனவும் மேற்படி அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

30.04.2013 அன்று சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் 16,444 நபர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படி வழங்க ஒரு மாதத்திற்கு ரூ.61.36 இலட்சம் கூடுதல் செலவாகும். நடப்பு நிதியாண்டிற்கு (01.01.2013 முதல் 31.03.2014 வரை) மட்டும் செலவாகும் கூடுதல் தொகை ரூ.9.21 கோடி ஆகும்.அரசாணை எண்.147 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 03.05.2013ன் படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 72 விழுக்காட்டிலிருந்து 80 விழுக்காடாக உயர்த்தி 01.01.2013 முதல் 30.04.2013 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை, மே – மாதம் 2013–ம் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கும் பொருட்டு, மேற்படி அரசாணையினை சென்னை மாநகராட்சியில் அமுலாக்கம் செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

''20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண்.219/2013 நாள் 20.05.2013–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/1371/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.324/2013 **பொருள் எண். 15**

**<u>அரசாணை அமலாக்கம் – பின்னேற்பு அனுமதி</u>**

அரசாணை எண்.145 நிதி (படிகள்) துறை நாள். 02.05.2013 ல் ஜனவரி 2013 முதல் அகவிலைப்படி 72 விழுக்காடிலிருந்து 80 விழுக்காடுகள் உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் 01.01.2013 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணையில், ஏற்கனவே அகவிலைப்படி பெறும் சில்லறை செலவினத்திய குறிப்பிடப்பட்ட மாத சம்பளம் பெறும் முழுநேர பணியாளர்களுக்கு பொருந்தும் மற்றும் பகுதி நேர பணியாளர்களுக்கு பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை மான்யம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களுக்கும் பல்கலைகழக மான்ய குழு / அனைத்து இந்திய தொழிற் நுட்ப கல்வி குழு சம்பள விகிதங்களின் கீழ்வரும் பணியாளர்களுக்கும் அரசு மற்றும் மான்யம் பெறும் பல் தொழில் பயிற்சி பள்ளிகள், சிறப்பு பட்டயப்படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோர்க்கும் வருவாய் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், மதிய உணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவி செய்பவர்கள், சிறுவர் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழுள்ள கிராம பஞ்சாயத்துகளில் பணிபுரியும் உதவியாளர்கள் / எழுத்தர்களுக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகவிலைப்படியினால் சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவீனம் ரூ.1.29 கோடியாகும் எனவும் நடப்பு நிதியாண்டில் ரூ. 15.50 கோடி கூடுதல் செலவினம் ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வரசாணை சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதால், இவ்வரசாணை சென்னை மாநகராட்சியில், மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு நடைமுறைப்படுத்த, ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

எனவே, அரசாணை எண்.145 நிதி (படிகள்) துறை நாள் 02.05.2013யினை சென்னை மாநகராட்சியில் 01.01.2013 முதல் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''20.05.2013 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டத்தின் தீர்மான எண். 221/2013 நாள் 20.05.2013–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**மா.அ.6.ந.க.எண்.அ1/5336/2013**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 10.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.325/2013 பொருள் எண்.16

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

திரு. K. திருமங்கை ஆழ்வார், மண்டல அலுவலர், மண்டலம்–6 (பழைய மண்டலம்–4) அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். திரு.K. திருமங்கை ஆழ்வார், மண்டல அலுவலர், அவர்கள் முதன் முதலில் 07.07.1979 அன்று உதவி பொறியாளராக சென்னை மாநகராட்சியில் மழை நீர்வடிகால் துறையில் பணியமர்வு செய்யப்பட்டு, பணித்துறை, மண்டலம்–5 பணித்துறை (தனியார் தெருக்கள்) பணிபுரிந்துள்ளார், பின்னர் 03.05.1992 முதல் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று மண்டலம்–9, மண்டலம்–6, திடக்கழிவு மேலாண்மைத்துறை, பேருந்து சாலைகள்துறை , மண்டலம்–13 மற்றும் மண்டலம்–10ல் பணிபுரிந்துள்ளார். இவர் 11.05.2007 முதல் செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று மண்டலம்–9, மண்டலம்–5, மற்றும் மண்டலம்–10ல் பணிபுரிந்துள்ளார். இவர் 24.08.2011 முதல் மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்று மண்டலம்–6 (பழைய மண்டலம்–3), மழை நீர்வடிகால்துறை, மண்டலம்–5 மற்றும் மண்டலம்–6ல் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

தனியர் வகித்து வந்த உதவி பொறியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியருக்கு உதவி செயற் பொறியாளர், செயற் பொறியாளர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. தனியர் பணிபுரிந்த மண்டலம் மற்றும் துறைகளிலிருந்து தனியர்மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை, முன்பண நிலுவை மற்றும் தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லை என்ற சான்றுகள் பெறப்பட்டுள்ளது, தனியர் சென்னை மாநகராட்சியில் 33 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலிருந்து இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது

சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் உறுப்பினர் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும், தனியருக்கு சென்னை மாநகராட்சி மூலமாக வீடு கட்டும் முன்பணம் எதுவும் வழங்கப்படவில்லை.

தனியரை 31.05.2013 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க பரிந்துரை செய்யப்படுகிறது. தனியர் வகுப்பு–2ஐ சார்ந்த அலுவலர் என்பதால், வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிப்பதற்கு மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, திரு.K. திருமங்கை ஆழ்வார், மண்டல அலுவலர், மண்டலம்–6 அவர்கள் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பண நிலுவைகள் மற்றும் நிதி இழப்பீடு ஏற்படுத்தியது ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதற்கு தனியரை பொறுப்பாக்கி, தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி தனியரை 31.05.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.வ.அ.ந.க.எண்.அ1/193/2013**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 16.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.326/2013 பொருள் எண்.17

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

திரு.எம்.ஆர்.சுப்புராம், செயற்பொறியாளர், வட்டார அலுவலகம் (வடக்கு), மண்டலம்–5 அவர்களது பதவியானது வகுப்பு –2ன் கீழ் வருவதால் அகவை முதிர்வு காரணமாக 31.05.2013 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

திரு.எம்.ஆர்.சுப்புராம், செயற்பொறியாளர், வட்டார அலுவலகம்(வடக்கு), மண்டலம்–5 அவர்கள் முதன் முதலில் 08.11.1979 அன்று உதவி பொறியாளராக சென்னை மாநகராட்சி பணியில் சோந்து 01.10.2007 அன்று செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

தனியருக்கு தகுதிகாண் பருவம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தனியர் தற்போது வகித்துவரும் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை. தனியர், சென்னை மாநகராட்சியில் 34 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலிருந்து இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

தனியர், பணியாற்றிய அனைத்து மண்டலம் மற்றும் துறைகளுக்கு தணிக்கை தடை முன்பண நிலுவைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரப்பட்டதில் சில துறை/மண்டலங்களில் ‘இன்மை’ அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. மேலும், வட்டார அலுவலகம்(வடக்கு) மண்டலம்–5ல் பணியாற்றிய காலத்தில் தனியர் பெயரில் தனிப்பட்ட முறையில் தணிக்கைத்தடைகள் ஏதும் இல்லை.

தனியர், சென்னை மாநகராட்சி மூலம் வீடு கட்டும் முன்பணம் பெற்றுள்ளார். நிலுவையில் உள்ள வீடுகட்டும் முன்பண தொகையை தனியரின் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும்.

மேலும், வாகன முன்பணம் சென்னை மாநகராட்சியிலிருந்து பெற்றுள்ளார் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் உறுப்பினர் இல்லை என்ற விவர சான்று பெறப்பட்டுள்ளது.

எனவே, திரு.எம்.ஆர்.சுப்புராம், செயற்பொறியாளர், வட்டார அலுவலகம்(வடக்கு) அவர்கள் மீது தணிக்கை தடைகள், நேர்செய்யப்படாத முன்பண நிலுவைகள், வீடு கட்டும் முன்பணம் மற்றும் வாகன முன்பணம், நிதி இழப்பீடு ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் அதற்கு தனியரை பொறுப்பாக்கி தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 31.05.2013 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.எ1/3670/2012**
**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 16.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.327/2013

பொருள் எண்.18

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

12.12.2012 நாளிட்ட சுற்றறிக்கையின் படி, திரு.கே.ஜெயக்குமார், செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2013 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 30.05.1975 வரைவாளராக பணியில் சேர்ந்தார். 19.05.1979 முதல் 31.03.1989 வரை இளநிலை பொறியாளராகவும் 01.04.1989 முதல் 31.03.1992 வரையில், இளநிலை பொறியாளராக மற்றும் உதவி பொறியாளராகவும் 01.04.1992 முதல் 11.05.1998 வரை உதவி பொறியாளராகவும் 12.05.1998 முதல் 28.02.2000 வரையில் உதவி பொறியாளர் மற்றும் தேர்வு நிலை உதவி பொறியாளராகவும் 01.03.2000 முதல் இந்நாள் வரையிலும் உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளராகவும் தொடர்ந்து 38 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். தனியர் வகித்த வரைவாளர், இளநிலை பொறியாளர், உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பதவிகளிலும் பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது.

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களிலிருந்து தணிக்கைத்தடை நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து விவரம் கோரி, இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. தற்பொழுது பணிபுரியும் மழைநீர்வடிகால்துறையிலும் தணிக்கை தடை, நேர்செய்யப்படாத முன்பணம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

02.05.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் அறிக்கையில் தனியர் மீது இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

03.04.2013 நாளிட்ட சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் உறுப்பினர் இல்லை என தனி அலுவலர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு. கே. ஜெயக்குமார் செயற்பொறியாளர், மழைநீர்வடிகால் துறை அவர்களின் மீது தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள், நிதி இழப்பீடுகள் ஏதும் இருப்பதாக பின்னர்தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி, ஓய்வூதியபணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும், 31.05.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>சு.து(ம)ந.எண்.எம்2/2495/2012.</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 18.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.328/2013 பொருள் எண்.19

**<u>வயது முதிர்வு ஓய்வு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை, மலேரியா பிரிவு, திரு.வே.பாலகிருஷ்ணன், முதுநிலை பூச்சியியல் வல்லுநர், (தலைமையிடம்) என்பவர் **31.05.2013** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

திரு.வே.பாலகிருஷ்ணன், என்பவர் சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை, மலேரியா பிரிவில் 18.12.1982 முதல் பூச்சியியல் உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டார். இவருக்கு பூச்சியியல் உதவியாளர் பதவியில் 18.12.1982 முதல் பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. இவருக்கு 18.12.1984 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். மேலும், இவர் 24.09.2008 முதல் முதுநிலை பூச்சியியல் வல்லுநராக பதவி உயர்வு பெற்றார். இவருக்கு முதுநிலை பூச்சியியல் வல்லுநர் பதவியில் . 24.09.2008 முதல் பணிவரன் முறை படுத்தப்பட்டுள்ளது.

திரு.வே.பாலகிருஷ்ணன், முதுநிலை பூச்சியியல் வல்லுநர், (தலைமையிடம்) என்பவரது பிறந்த தேதி 20.05.1955 என்பதால் இவருடைய வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள். **31.05.2013.** அன்று பிற்பகலாகும்.

திரு.வே.பாலகிருஷ்ணன், முதுநிலை பூச்சியியல் வல்லுநர், (தலைமையிடம்) என்பவர் பணிக்காலத்தில் பழைய மண்டலம்–**6** மற்றும் மண்டலம்–7ல் பணிசெய்துள்ளார். தற்பொழுது சென்னை மாநகராட்சி, எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் பழைய மண்டலம்–**6** மற்றும் மண்டலம்–7 ஆகிய இரண்டு மண்டலங்கள் தற்பொழுது புதிய மண்டலம்–**9** ஆகும். இம்மண்டலத்தில் இவர் பணிமாற்று அடிப்படையில் பணிபுரிந்த காலங்களில் இவர்மீது எவ்வித தணிக்கைத் தடை இல்லையென மண்டல அலுவலர்–9 அவர்களால் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இவர் தலைமையிடத்தில் பணிபுரிந்த காலத்தில் இவர் மீது தணிக்கைத் தடை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் **30.04.2013** தேதியிட்ட கடிதத்தில் இவர்மீது விசாரணை ஏதுமில்லை என தெரிவித்துள்ளார்.

தனியர் வகிக்கும் பதவி வகுப்பு–**2**ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியரை **31.05.2013** அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியிமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, திரு.வே.பாலகிருஷ்ணன், முதுநிலை பூச்சியியல் வல்லுநர், (தலைமையிடம்) பொது சுகாதாரத் துறை மலேரியா பிரிவு, என்பவர் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு தொடர்பான தணிக்கைத் தடைகள் மற்றும் நீண்ட கால முன்பணத் தொகை சரிசெய்யப்படாமல் இருப்பது பின்னர் தெரியவரின் அவ்வாறு நிதி இழப்பிற்கான தொகைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அவரது ஓய்வூதிய பணப்பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு **31.05.2013** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/30984/1997</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 15.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**329/2013** பொருள் எண்.**20**

**<u>பணியமைப்பு</u>**

**14.10.2012** நாளிட்ட அரசாணையின்படி சென்னை மாநகராட்சிக்கு கூடுதலாக வழங்கிய **784** பணியிடங்கள் மற்றும் **969** பணியிடங்களை ஒப்புவிப்பதற்கு ஆணை வழங்கப்பட்ட நிலையில் சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட **1896** பணியிடங்களில் **1150** தற்காலிக பணியிடங்கள் தற்போதைய நிலையில் அவசியம் இல்லாததாக கருதப்படுவதால் **1896** தற்காலிக பணியிடங்களுக்கான காலத்தினை **01.04.2012** முதல் **30.11.2012** வரை நீட்டிக்கவும், **746** பணியிடங்களுக்கு மட்டும் **(1896 – 1150 = 746) 01.12.2012** முதல் **31.03.2013** வரை தொடர் நீட்டிப்பு ஆணை வேண்டியும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு **08.11.2012** நாளிட்ட கடித மூலமாக அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்நிகழ்வுக்கு மன்றத்தீர்மான எண்.**528/2012**, நாள்/**29.11.2012**ல் அனுமதி பெறப்பட்டு, இம்மன்றத்தீர்மானத்தின் நகல் அரசுக்கு அனுப்பப்பட்டது.

**07.02.2013** நாளிட்ட அரசாணை (நிலை) எண்.**64** ந.நி.ம.கு.வ.து (மா.ந.3), நாள் **07.02.2013**ல் சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு பிற்சேர்க்கை (I மற்றும் II ) க்கு அரசு நிதித்துறையின் ஒப்புதலுடன் பின்வருமாறு ஆணையிட்டுள்ளது.

(அ) கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **1896** தற்காலிக பணியிடங்களுக்கு **01.04.2012** முதல் **30.11.2012** வரையில் பின்னேற்பு மற்றும் தொடர் நீட்டிப்பு.

(ஆ) கோப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **746** தற்காலிக பணியிடங்களுக்கு **01.12.2012** முதல் **31.03.2013** வரையில் பின்னேற்பு மற்றும் தொடர் நீட்டிப்பு.

தற்போது, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள **42** உள்ளாட்சி அமைப்புகளை சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சேர்த்தல் மற்றும் எல்லையை விரிவுப்படுத்தியதன் மூலம் சென்னை மாநகராட்சியின் எல்லை **174** ச.கி.மீட்டரிலிருந்து **426** ச.கி.மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனால் **15** மண்டலங்கள் மற்றும் **200** வார்டுகள் என நிர்ணயம் செய்து சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் மத்திய, வடக்கு மற்றும் தெற்கு என மூன்று வட்டார அலுவலகங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி எல்லை விரிவுபடுத்தப்பட்ட நிலையில், மாநகராட்சி பணிகள் தொய்வின்றி மேற்கொள்வது அவசியமானதாலும், **15**ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் தொடர்நீட்டிப்பு ஆணை பெறப்பட்டு வரும் நிலையில் அரசிடமிருந்து தற்போது **31.03.2013** வரையில் தொடர்நீட்டிப்பு ஆணை பெறப்பட்டுள்ள கோப்பில் குறிப்பிட்டுள்ளவாறு **746** தற்காலிகமான பணியிடங்களை **01.04.2013** முதல் சென்னை மாநகராட்சியில் நிரந்தரமாக தக்கவைத்துக்கொள்வது தொடர்பாக அரசுக்கு பிரேரணை அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/18500/2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 15.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.330/2013 பொருள் எண்.21

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (வாலாயம் ) எண். 893, பொது (சிறப்பு–அ) துறை, நாள்: 04.03.2013ன்படி, திருமதி.எம்.லக்ஷ்மி, மாவட்ட வருவாய் அலுவலர் / பொது மேலாளர் (சந்தை), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், சென்னை, அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) ஆக அயற்பணியில் 25.04.2013 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் பதிவிற்காகவும் தகவலுக்காகவும் சமர்ப்பிக்கின்றது .”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**<u>ம.அ.9.ந.க.எண்.அ1/ 3732/2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.331/2013 பொருள் எண்.22

**<u>வயது முதிர்வு ஓய்வு அனுமதி</u>**

மண்டல அலுவலர்–9 அவர்களின் குறிப்பில் திரு.என்.ரத்தினம், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–9, பகுதி–27 அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2013 அன்று ஒய்வு பெறவுள்ளார். மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு பணி குழுமத்தில் விசாரணைகளோ அல்லது நடவடிக்கைகளோ நிலுவையில் ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. இது தவிர தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்த நாள் முதல் இந்நாள் வரை பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களில் தணிக்கை தடை, நிதி இழப்பீடு ஆகியவை நிலுவை இருப்பது குறித்து விவரம் கோரப்பட்டு விவரம் பெறப்பட்டதில் மண்டலம்–9ல் 2013–2014ஆம் நிதியாண்டில் நேர் செய்யாத முன்பணம் ரூ.17,37,049/– தனியர் பெயரில் நிலுவையில் உள்ளது என கணக்கு அலுவலர், மண்டலம்–9 அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தொகையை நேர் செய்வதற்கு துறை ரீதியாக உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் எனவே தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம் என பரிந்துரை செய்யதுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராகவும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்–9 அவர்களின் குறிப்பினை ஏற்று வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்கள் திரு என்.ரத்தினம், உதவி செயற்பொறியாளர் பகுதி–27 அவர்களை 31.5.2013 அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்காலம் என பரிந்துரை செய்துள்ளார்.

திரு.என்.ரத்தினம், உதவி செயற்பொறியாளர், அவர்களை நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழு பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தியும் தற்போது நேர் செய்யப்படாத முன்பண தொகை ரூ.17,37,049/–ஐ முழுமையாக நேர் செய்த பின்பே தனியருக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படும் என்கிற நிபந்தனைக்குட்படுத்தியும் மேலும், நேர் செய்யப்படாத முன்பணம் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியருக்கு வழங்க இருக்கும் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, திரு.என்.ரத்தினம், உதவி செயற்பொறியாளர், மண்டலம்–9 அவர்களை 31.5.2013 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/0099/2012</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.332/2013 பொருள் எண்.23

**<u>தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடை நடத்துவதற்கு அனுமதி</u>**

17.4.2013 நாளிட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளரின் கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் இயங்கும் நியாய விலைக் கடைகளுக்கு மாற்று இடமாக மண்டலம்–9, வார்டு–115, 88 கரீம் சுபேதார் தெருவில் ஏற்கனவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம், சென்னை (தெற்கு) மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநகராட்சி கட்டிடத்தில் போதிய இடவசதி இல்லாததால் அதனை ஒட்டியுள்ள தற்போது பயன்பாட்டில் இல்லாத மாநகராட்சி மருந்தகக் கட்டிடத்தினை நியாய விலை கடைக்கு தற்காலிகமாக மாத வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுள்ளது.

9வது வார்டு குழு தீர்மானத்தில் மேற்படி இடத்தில் உள்ள சென்னை மாநகராட்சி மருந்தக கட்டிடத்தினை மாத வாடகை அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளது. மேலும், 15.04.2013 நாளிட்ட 9வது மண்டல அலுவலரின் குறிப்பில் மேற்படி இடத்தின் பரப்பளவு 388 சதுர அடி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–9, வார்டு –115ல் கரீம் சுபேதார் தெருவில் 388 ச.அடி பரப்பில் உள்ள பயன்பாட்டில் இல்லாத சென்னை மாநகராட்சி மருந்தக கட்டிடத்திற்கு மன்றம் பின்னர் நிர்ணயிக்கும் மாத வாடகையும் 12 மாத முன்பண வாடகையும் செலுத்த வேண்டும் என்றும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யயிருப்பின் மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நியாய விலை கடை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 241/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>நி.ம.உ.துந.க.எண்.எல்இ9/2758/2007</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.333/2013 பொருள் எண்.24

**<u>தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய சமூக நலக்கூடம் சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ள அனுமதி</u>**

மண்டலம்–8, கோ–105, (பழைய மண்டலம்–5, வார்டு எண்.75)இல் 2 மனை 2395 சதுர அடி நிலத்தில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான சமுகநலக்கூடத்தை வீட்டு வசதி வாரியத்திடமிருந்து கையகப்படுத்தி சென்னை மாநகராட்சியின் மூலம் நவீன வசதிகளுடன் கூடிய சமூக நலக்கூடம் அமைப்பதற்கு தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டதில், ரூ.2.50 இலட்சம் செலுத்தி இந்த சமூக நலக்கூடத்தினை பெற்றுக்கொள்ள சென்னை மாநகராட்சியின் இசைவினை கோரியது.

அரும்பாக்கம் தமிழ்நாடு வீட்டு வசதிவாரிய திட்டப்பகுதியில் இந்த சமூக நலக்கூடம் அமைந்துள்ள நிலம் உட்பட மொத்தம் 73.73 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சென்னை மாநகராட்சியால் ஒப்படைக்கப்பட்ட நிலமாகும். இந்த நிலத்திற்கு உண்டான கிரயத் தொகையினை மனை ஒன்றுக்கு ரு.1400/– என்ற அடிப்படையில் கணக்கீட்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை மாவட்ட ஆட்சியரிடம் 1986 ஆம் வருடத்தில் ரூ.18,73,480/–ஐ செலுத்தி உள்ளது. ஆனால் மேற்குறிப்பிட்ட 73.73 ஏக்கர் நிலத்திற்கு உண்டான கிரயத்தொகை இதுவரை சென்னை மாநகராட்சிக்கு கிடைக்கப்பெறவில்லை.

அரசாணை எண்.758, ந.நி.ம.கு.வ. துறை நாள்–24.06.1986–ல் மனைை ஒன்றுக்கு ரூ.2400/– என்ற கிரைய அடிப்படையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிலம் பெற்றுக்கொண்ட நாள் முதல் 9 விழுக்காடு கூட்டு வட்டியுடன் நில கிரையத்தை வசூலித்துக்கொள்ளுமாறு சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட்டுள்ளது. மேற்படி சமூக நலக்கூடம் அமைந்துள்ள நிலத்தின் மூல உரிமைதாரர் சென்னை மாநகராட்சி என்பதாலும், மேற்படி நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் பொது உபயோகத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாலும், இந்த நிலத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இலவசமாகவே சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

இதற்காக மேற்படி நிலத்தை சென்னை மாநகராட்சி இலவசமாக எடுத்துக் கொள்வதற்கு 5வது மண்டல வார்டுகுழு தனது தீர்மானம் எண். 06/ நாள்.12.12.07 ல் பரிந்துரை செய்ததின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட மன்றத் தீர்மான எண்.160/2008 நாள்.03.05.2008ன்படி மண்டலம்–5, வார்டு எண்.75, அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. காலனி தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய திட்டப்பகுதியில் சமூக நலக்கூடம் அமைந்துள்ள நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு இலவசமாக ஒப்படைப்பு செய்யுமாறு கோரி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அவர்களின் 17.06.2008 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் கே.கே. நகர் கோட்டத்தில் உள்ள அரும்பாக்கம் திட்டப்பகுதியில் வாரியத்திற்கு சொந்தமான 2 மனை 2395 சதுர அடி பரப்பளவுள்ள சமூக நலக்கூடத்தின் விற்பனை விலையான ரூ.2,95,62,500/–ஐ (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சத்து அறுபத்திரண்டு ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ள இசைவு தெரிவிக்குமாறு கோரப்பட்டது.

சென்னை மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2009–2010–ம் ஆண்டின் நிதி நிலை அறிவிப்பு (பத்தி எண்.20)–ல் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான பழைய திருமண மண்டபத்தை பெற்று மேம்படுத்தி, அதில் வரும் வருமானத்தை இரு துறைகளும் பகிரிந்து கொள்வது என்று முடிவெடுத்து, அந்த வகையில் குறிப்பிட்ட திருமண மண்டபம் கேட்டுப் பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட அறிவிப்பின்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு மேற்படி கட்டிடம் மற்றும் நிலம் சென்னை மாநகராட்சிக்கு இலவசமாக ஒப்படைப்பது குறித்து தொடர்ந்து கடிதங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அனுப்பப்பட்டது.

மேலும் **2010–11–ம்** ஆண்டு நிதிநிலை அறிக்கை, பத்தி எண். **95–ல்** மேற்படி சமூகநலக்கூடத்தினை விரைவில் பெற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. வழிகாட்டி மதிப்பு பதிவேட்டின்படி மேற்கண்ட நிலத்தின் வழிகாட்டி மதிப்பு ஒரு சதுர அடிக்கு ரூ.**1551/–** என்ற நிலையில் இச்சமூக நலக் கூடம் அமைந்துள்ள **2** மனை **2395** சதுர அடி நிலத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ.**1,11,67,200/–** என கணக்கிடப்பட்டது.

மேற்கண்ட சமூகநலக் கூடத்திற்கான கிரயத் தொகை ரூபாய். **2,95,62,500/–**யினை செலுத்தி சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள மன்றத் தீர்மானம் எண். **268**, நாள்.**22.06.2010–**ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

**07.07.2010** நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில் மேற்குறிப்பிட்ட மன்றத் தீர்மான விவரத்தை தெரிவித்து, மேற்குறிப்பிட்ட நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க உரிய மேல் நடவடிக்கையினை எடுக்குமாறும், கிரயத் தொகைக்கான காசோலையை யார் பெயருக்கு வழங்க வேண்டும் என்பதை தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக நேர்முக வரைவுக் கடிதம் சமர்ப்பித்த பொழுது வணக்கத்திற்குரிய மேயர், ஆளுங்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோருடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் மேற்படி இடத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சமூக நலக்கூடம் கட்டுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும், அதிலிருந்து பெறப்படும் வருமானத்தை பங்கிட்டுக் கொள்ளலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது என்று ஆணையர் அவர்கள் குறிப்பிட்டு, இது தொடர்பாக **28.12.2010** நாளிட்ட ஒரு நேர்முகக் கடிதத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேலாண்மை இயக்குநருக்கு அனுப்பினார்.

மேற்குறிப்பிட்ட நேர்முக கடிதத்தில் மேற்படி நிலத்தின் உரிமை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருக்கும் என்றும், அவ்விடத்தில் சமூகநலக்கூடம் கட்டுவதற்கான முன்நுழைவு அனுமதியை சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், மேற்படி இடத்தில் மாநகராட்சி மூலம் ரூபாய் **2** கோடி மதிப்பில் சமூகநலக்கூடம் கட்டியபின் அதன் வருவாயை சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் **40 : 60** விகிதத்தில் பங்கீட்டுக் கொள்ளலாம் என்றும் கருத்துரு தெரிவித்து இக்கருத்துருவினை பரிசீலித்து சென்னை மாநகராட்சி மேற்படி இடத்தில் சமூகநலக்கூடம் கட்டுவதற்காக முன்நுழைவு அனுமதியை வழங்குமாறு கோரினார்.

இக்கருத்துரு தொடர்பாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் **12.01.2011** நாளிட்ட தன் வாரிய தீர்மானம் எண். **9.03–**ல் ''விரிவான விவாதத்திற்குப்பின் வாரியம் மேற்படி நிலத்தை சென்னை மாநகராட்சிக்கு மனை ஒன்றுக்கு ரூ.**80** இலட்சங்கள் வீதம் விற்பதற்கு தீர்மானித்தது'' என முடிவெடுத்துள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்குறிப்பிட்ட வாரிய தீர்மான விவரத்தை தெரிவித்து, சமூக நலக்கூடத்தை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பதற்கு ஏதுவாக ரூ.**2,95,62,500/–**ஐ செலுத்துமாறு கோரியது.

இப்பொருள் மீது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடர்ந்து பல்வேறு கடிதங்கள் மூலம் ஏற்கனவே தெரிவித்த தொகையை செலுத்தி விரைவில் சமூகநலக் கூடத்தை எடுத்துக் கொள்ளும்படியும், தவறும் பட்சத்தில் சென்னை மாநகராட்சி மேற்குறிப்பிட்ட சமூகநலக் கூடத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை எனக் கருதி மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது. **24.06.1986–**ஆம் நாளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண். **758–**இல் மாவட்ட ஆட்சியரால் சந்தை மதிப்பாக நிர்ணயம் செய்யப்பட்டபடி மனை ஒன்றுக்கு ரூ. **2400/–** என்ற வீதத்தில் மாநகராட்சி **28.6.77** முதல் வாரியம் நிலத்துக்கான விலையை செலுத்தும் காலம் வரை அசலுடன் **9** விழுக்காடு கூட்டு வட்டியையும் சேர்த்து விலை பெறப்பட வேண்டுமெனவும், ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி **28.6.1977** முதல் **31.03.2013** வரை **9** விழுக்காடு கூட்டு வட்டியையும் சேர்த்து விலை கணக்கிட்டால் சமூகநலக் கூடம் அமைந்த நிலத்தின் விலை ரூ. **1,56,910.39** பை ஆகும். ஆனால் தற்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சமூக நலக் கூடம் அமைந்த இடத்திற்கு கோரும் தொகை ரூ.**2,95,62,500/–** ஆகும்.

மேற்படி இடம் மற்றும் கட்டிடத்தை இலவசமாக அளிக்க இயலவில்லை எனில் சென்னை மாநகராட்சி நிலத்திற்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் கூட்டு வட்டி அளவில் (மனை ஒன்றுக்கு ரூ.2400/– ) மேற்படி சமூக நலக் கூடம் அமைந்த நிலத்திற்கும் அதே தொகை மற்றும் 9% கூட்டு வட்டி அளவில் நிலக் கிரயமாக வழங்குவது குறித்து பரிசீலிக்கலாம்.

இந்நிலையில் அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வார்டு எண்.105ல் உள்ள சமூக நலக் கூடம் உள்ள நிலத்தை பொது ஏலம் மூலம் விற்பதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முடிவெடுத்துள்ளதாகவும், தனியார் திருமண கூடங்களில் உயர்ந்தபட்ச வாடகை காரணமாக மேற்படி சமூக நலக்கூடம் MMDA காலனி பொது மக்கள் மட்டுமின்றி அருகிலுள்ள பிற பகுதி பொது மக்களும் மேற்படி இடத்தில் சமூக நலக் கூடம் கட்டி, பயன்பாட்டுக்கு வருவதற்கு கோரி வருகின்றனர் என்றும் தெரிவித்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நிலையை தெரிவித்து, ஏலக் கருத்துருவை தள்ளி வைக்க இணங்க வைக்குமாறு நடவடிக்கை எடுக்க கோரி உள்ளார்கள்.

மேலும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 17.05.2013 அன்று இப்பகுதியை நேரடியாக களப்பணி ஆய்வு மேற்கொண்டு சென்னை மாநகராட்சியே இச்சமூக நலக் கூடத்தினை எடுத்துக் கொள்ளலாம் என்று ஆணையிட்டதின் அடிப்படையிலும் சென்னை மாநகராட்சியே இச்சமூக நலக் கூடத்தினை பொது மக்கள் நலன் கருதி எடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில் மேற்படி சமூகநலக் கூடம் அமைந்த இடத்தை (2மனை 2395 சதுரஅடி) சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தை வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் கோரியதின் அடிப்படையில் இனம் ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ விற்கு மன்றத்தின் அனுமதி அளிக்கலாம் என்று திருத்தம் வெளியிடப்படுகிறது.

அரும்பாக்கம் வீட்டு வசதி வாரிய திட்டப்பகுதிக்காக (இக்கோப்பில் சம்பந்தப்பட்ட சமூக நலக் கட்டம் அமைந்த நிலம் உள்பட) சென்னை மாநகராட்சி அளித்த மொத்த நில பரப்பளவு 73.73 ஏக்கர் ஆகும்.

இதற்கு அரசாணை எண்.758 ந.நி.ம.கு.வ.துறை நாள்–24.06.1986–ன் படி நிர்ணயிக்கப்பட்ட மொத்த கிரயத் தொகையின்படி (மனை ஒன்றுக்கு ரூ.2400/– வீதம்) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 73.73 ஏக்கர் நிலத்திற்கு (28.6.77 முதல் 31.03.2013 முடிய) (9% கூட்டு வட்டியுடன்) செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ.7,00,41,135/– (ரூ.7.00 கோடி) ஆகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கிரயத் தொகை செலுத்தும் நாள்வரை கூட்டு வட்டி கணக்கிடப்படும்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில்,

(அ) தற்போது சமூகநல கூடம் அமைந்த இடம் சென்னை மாநகராட்சிக்கு பொது மக்கள் பயனுக்காக தேவைப்படுவதால், அந்நிலத்திற்கு (2 மனை 2395 சதுர அடி). மேற்குறிப்பிட்ட அரசாணையில் குறிப்பிட்டபடி மனை ஒன்றுக்கு ரூ.2400/– வீதம் கிரயத் தொகை (31.03.2013 முடிய 9% கூட்டு வட்டியுடன்) ரூ.1,56,910/– என கணக்கிடலாம்.

(ஆ) மேற்படி 2 மனை 2395 சதுர அடி நிலத்திற்கான தொகை போக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செலுத்த வேண்டிய தொகை ரூ.6,98,84,225/–ஐ உடனே சென்னை மாநகராட்சிக்கு செலுத்துமாறும்,

மேற்படி சமூகநலக் கூடம் அமைந்த இடத்தை (2 மனை 2395 சதுர அடி) சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தை கோரலாம்.

மேற்குறிப்பிட்ட பொருளில் ‘அ’ மற்றும் ‘ஆ’ பத்திகளின் மீது வார்டு குழு பின்னேற்பு தீர்மானம் பெறவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 240/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/879/2013**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.334/2013 பொருள் எண்.25

**தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்ய அனுமதி**

தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் அலுவலகத்திற்காக சென்னை மாநகராட்சி, மண்டலம்—8, வார்டு—103ல் சுமார் 8000 சதுர அடி பரப்பில் காலியாக உள்ள பழைய 5வது மண்டல அலுவலக கட்டிடத்தினை இவ்வாணையத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

8வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 93/2013, நாள் 12.4.2013ல் , மண்டலம்—8, வார்டு—103ல், எண். 183,. பெரியார் ஈ.வெ.ரா சாலையில் அமைந்துள்ள பழைய மண்டல அலுவலகத்தின் முதல் தளத்தினை ஒதுக்கீடு செய்ய வேண்டி தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு கடிதம் அளித்ததின் பேரில் மன்ற தீர்மான எண். 139/2009இல் படி மாநகராட்சி கட்டிடங்களில் அமைந்துள்ள கடைகளுக்கு சதுர அடி ஒன்றுக்கு ரூ. 35/— என வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு, அதன் அடிப்படையில் மேற்கண்ட பழைய மண்டல அலுவலகத்தின் முதல் தளத்தில் மேற்கு திசையில் அமைந்துள்ள 6000 சதுர அடி இடத்தினை ரூ.2,10,000/—க்கு மாத வாடகைக்கு தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்துள்ளது.

எனவே, மண்டலம்—8, வார்டு—103ல் உள்ள எண். 183, பெரியார் ஈ.வெ.ரா சாலையில் அமைந்துள்ள பழைய மண்டல அலுவலகத்தின் முதல் தளத்தில் மேற்கு திசையில் 6000 சதுர அடியில் அமைந்துள்ள அலுவலக கட்டிடத்தினை மன்றம் பின்னர் நிர்ணயிக்கும் மாத வாடகை மற்றும் 12 மாத முன்பண வாடகை செலுத்த வேண்டும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யஇருப்பின் மாநகராட்சி அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் ஆகிய நிபந்தனைகளுடன் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண்.242/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘தமிழ்நாடு குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி தமிழக அரசால் நடத்தப்படுவதால் மாத வாடகை சதுர அடி ஒன்றுக்கு ரூ.10.00 என நிர்ணயம் செய்யலாம் என்ற பெரும்பான்மையான மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/188/2008</u>**
**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.335/2013 **பொருள் எண். 26**

**<u>நிலம் கையகப்படுத்துவதற்கான செலவினத் தொகைக்கு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, பழைய வார்டு–78, பழைய மண்டலம்–5ல், புதிய மண்டலம்–9, புதிய வார்டு–110–இல் அமைந்துள்ள ஸ்டெர்லிங் சாலை, நெல்சன் மாணிக்கம் சாலையையும், கல்லூரி சாலையையும் இணைக்கும் முக்கியமான இணைப்புச் சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு ஸ்டெர்லிங் 1வது சந்து முதல் ஸ்டெர்லிங் நிழற்சாலை வரையுள்ள தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி ஸ்டெர்லிங் சாலை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டு சுமார் 620 ச.மீ பரப்புள்ள மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி தனியாரிடமிருந்து நிலமெடுப்பு செய்வதற்கு மன்றத் தீர்மானம் எண்.663/07, நாள்.29.12.2007 மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

பின்னர் ஸ்டெர்லிங் சாலை, ஸ்டெர்லிங் சாலை 1வது சந்து முதல் ஸ்டெர்லிங் சாலை நிழற்சாலை வரை சந்திப்பு விரிவாக்கப் பணிக்காக ஏழு புல எண்களாக (552/1, 2, 551/4, 12, 3, 2, 11) மாற்றப்பட்டு அதற்காக மொத்த பரப்பளவு 194.33 ச.மீ நிலத்தினை மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் விலை மற்றும் ஈட்டுத் தொகையினை செலுத்தி தனியாரிடமிருந்து நிலமெடுப்பு செய்திடுவதற்கு மன்றத் தீர்மானம் எண்.554/2008, நாள்.29.10.2008–ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. நில எடுப்புக்குட்பட்ட 2190 சதுர அடி நிலத்திற்கான மதிப்பு ரூ. 1,46,47,060/– என வட்டாட்சியரால் கணக்கிடப்பட்டது.

27.07.2010 அரசு கடிதத்தில் மேற்படி செலவின தொகையை சென்னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஏற்பது குறித்து மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (194.33 ச.மீ) 2190 சதுர அடிக்கு நிலம் கையகம் செய்ய ரூ.1,46,47,060/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஆறு லட்சத்து, நாற்பத்து ஏழாயிரத்து, அறுபது மட்டும்) செலவில் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 1894 பிரிவு 17(2)ன் கீழ் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளவும், அரசின் நிர்வாக ஒப்புதலினை பெறவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. (மன்ற தீர்மானம் எண். 455/10, நாள்.29.10.10) இதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் பெற அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தன் 07.06.2012 நாளிட்ட நேர்முக கடிதத்தில் ஸ்டெர்லிங் சாலையில் உள்ள 2190 சதுர அடி நிலத்தினை கையகப்படுத்த தேவைப்படும் மொத்த தொகை ரூ.1,46,60,080/– என முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார் என்றும், ஆனால் சென்னை மாநகராட்சி, மன்றத்தீர்மானத்தில் (எண்.455/2005, நாள்–29.10.2010) நிலம் கையகப்படுத்த தேவைப்படும் தொகை ரூ.1,46,47,060/– என உள்ளது என்றும் தெரிவித்து, சென்னை மாவட்ட, எழும்பூர் – நுங்கம்பக்கம் கிராம் பிளாக் எண்.33, நகர அளவை எண்கள்.552/1 மற்றும் பலவற்றில் உள்ள 2190 சதுர அடி தனியார் நிலங்களை, ஸ்டெர்லிங் சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக, அகலப்படுத்துவதற்காக தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, அவசர பிரிவு 17(2)–ன்கீழ் கையகப்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதலை வழங்க ஏதுவாக சரியான தொகையினை கணக்கிட்டு சென்னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து இச்செலவினத்தினை மேற்கொள்ள உரிய தீர்மானத்தினை பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக பெறப்பட்ட மன்றத் தீர்மானத்தின் எண். 455/10, நாள்.29.10.10–ன்படி 2190 சதுர அடிக்கு மொத்த தொகை ரூ.1,46,47,060/– என்று இருப்பதனை திருத்தம் செய்து முதன்மை செயலர் மற்றும் நிர்வாக ஆணையரால் அறிவிக்கப்பட்டுள்ள தேவைப்படும் மொத்த தொகையான ரூ.1,46,60,080/– ஐ (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஆறு லட்சத்து அறுபதாயிரத்து எண்பது மட்டும்) தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 1894 அவசர பிரிவு 17 (2)ன் கீழ் மேற்குறிப்பிட்ட புலங்களை கையகப்படுத்த சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட அரசின் நிர்வாக ஒப்புதலினை பெற நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 210/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண்.246/2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**சு.து.ந.க.எண்.பி1/336/2013**

**முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.336/2013 பொருள் எண்.27

**அம்மா உணவகங்கள் – நவீன இயந்திரங்கள் பயன்படுத்தி மாலையில் சப்பாத்தி மற்றும் பருப்பு கடைசல் விநியோகம் செய்ய அனுமதி.**

அரசாணை எண்.21 (எம்.சி.1) ந.நி.ம.கு.வ.துறை, நாள்.17.01.2013ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளுக்கிணங்க சென்னை மாநகராட்சியில் தற்சமயம் 200 அம்மா உணவகங்கள் திறக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன. இவ்வுணவகங்களில் காலையில் இட்லி, சாம்பாரும், மதியம் சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் ஆகியவையும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இவ்வுணவகங்களில் மாலையில் சப்பாத்தி மற்றும் பருப்பு கடசல் விநியோகிக்க பொது மக்கள் கேட்டுக் கொண்டதாக 27/04/2013 அன்று நடந்த ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து மண்டல அலுவலகர்கள் மற்றும் அனைத்து மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக ஆய்வு செய்து தனது அறிக்கையினை சமர்ப்பிக்க வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் முதன்மை செயலாளர்/ஆணையாளர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அரசாணையில் குறிப்பிட்டுள்ள குழு தனது அறிக்கையினை 29/04/2013 அன்று சமர்ப்பித்தது. பொது மக்களில் கோரிக்கைக்கிணங்கவும், குழுவின் அறிக்கை அடிப்படையிலும் சென்னை மாநகரில் இயங்க வருகின்ற அம்மா உணவகத்தில் மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை ஒவ்வொரு உணவகத்திலும் 2000 சப்பாத்தி மற்றும் அதற்கான பருப்பு கடைசல் வீதம் 200 அம்மா உணவகங்களில் 4 இலட்சம் சப்பாத்திகள் மற்றும் அதற்குண்டான பருப்பு கடைசலை தயார் செய்து விற்பனை செய்து பொது மக்களின் தேவையை பூர்த்தி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

6 நபர்கள் கொண்ட மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் ஒரு மணி நேரத்திற்கு 50 சப்பாத்திகள் மட்டுமே தயாரிக்க இயலும். ஆனால் நவீன இயந்திரங்களை பயன்படுத்தி சப்பாத்தி தயாரிக்கும் போது ஒரு மணி நேரத்திற்கு 3000 எண்ணிக்கை சப்பாத்திகள் தயாரிக்க முடியும். இதன் மூலம் ஆட்கள் தேவையும் நேரமும் குறையும்.

நவீன இயந்திரங்களை நிறுவுவதற்கு குறைந்த பட்சம் மூன்று மாத காலம் தேவைப்படும்.

நவீன இயந்திரங்களை பயன்படுத்தி சப்பாத்தி மற்றும் பருப்பு கடைசல், சாம்பார், சாம்பார் சாதம் தயாரிக்க பொருட்கள் கொள்முதல் செய்யவும் மற்றும் தோராயமாக ஆகும் திட்ட செலவு ரூ.4,00,00,000/–(ரூபாய் நான்கு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 244/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘சப்பாத்தி தயாரிப்பதற்கான நவீன இயந்திரங்களை நிறுவுவதற்கு குறைந்த பட்சம் 3 மாத காலம் என்பதற்கு பதிலாக விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற திருத்தத்தின் அடிப்படையில் இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

**பே.சா.து.ந.க.எண்.பி5/ 1603 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 21.5.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.337/2013 **பொருள் எண். 28**

**2013–14 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்த திட்டங்கள் – சாத்தியக்கூறுகள் அறிக்கையும் (Feasibility Study) மற்றும் விரிவான திட்ட அறிக்கையும் (Detailed Project Report) தயாரிப்பதற்காக கலந்தரிதற்குறியவர்கள் நியமிக்க – அனுமதி.**

வணக்கத்திற்குரிய மேயர் அறிவித்துள்ள மொத்தம் திட்டங்களில் 20 திட்டங்கள் பேருந்து சாலைகள் துறை மற்றும் பூங்காத் துறையை சார்ந்ததாகும்.

இவற்றில் அறிக்கை எண்கள் 76, 77, 83, 84, 86, 85, 88, 91, 92, மற்றும் 94, 95 ஆகியவற்றின் மீது சம்மந்தப்பட்ட துறைகளுடன் கலந்தாய்வு செய்து பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவற்றில் கீழ் குறிப்பிட்டுள்ள சிறப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் அறிக்கையும் (Feasibility Study) மற்றும் விரிவான திட்ட அறிக்கையும் (Detailed Project Report) தயாரிப்பதற்காக, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி நீறுவனத்தின் (TNUIFSL) மூலம் கலந்தரிதற்குரியவர்கள் நியமிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசிய நிலை உள்ளது.

| வ. எண். | அறிவிப்பு எண். | அறிவித்த திட்டங்கள் |
|---|---|---|
| 01 | 78 | மாம்பலம் இரயில் நிலையத்திலிருந்து தியாகராய நகர் பேருந்து நிலையம் வரையில் அமைந்துள்ள மிகுதியான வணிக வளாகங்கள் காரணமாகப் பாதசாரிகளினால் ஏற்படும் சாலை நெரிசலைத் தவிர்க்க பாதசாரிகளின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ஆகாய நடைபாதை / வழித்தடங்கள் அமைக்கும் பணிக்கான சாத்தியக்கூறு அறிக்கையும் (Feasibility Study), விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்படும். |
| 02 | 79 | சென்னை மாநகரின் பாரிமுனை பகுதிக்கும், கோட்டை இரயில் நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நீதிமன்றம், முக்கிய அரசு அலுவலகங்கள் மற்றும் மிகுதியான வணிக வளாகங்கள் அமைந்துள்ளன. இப்பகுதியில் பேருந்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு பாதசாரிகளுக்காக நகரும்படி (Escalator) வசதியுடன் கூடிய ஆகாய நடைபாதை சாத்தியக்கூறு அறிக்கையும் (Feasibility Study), விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்படும். |
| 03 | 80 | சென்னையின் அடையார் மற்றும் கோட்டூர்புரத்தில் காலை / மாலை நேரங்களில், சாலையில் பேருந்து நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து மிகுதியாக பாதிக்கப்படுகிறது. இதனைக் களைய திரு.வி.க. மேம்பாலத்தில் இருந்து கோட்டூர்புரம் மேம்பாலத்தை இணைக்கும் வகையில் புதிய இணைப்புச் சாலை அமைக்கப்படும். |
| 04 | 81 | சென்னை மாநகரின் காளியம்மன் சாலை, ஆற்காடு சாலை மற்றும் ஜவஹர்லால் சாலையையும் இணைக்கும் முக்கிய பேருந்து வழித்தடச் சாலையாகும். இச்சாலையில் கோயம்பேடு மொத்த கொள்முதல் அங்காடி மற்றும் கோயம்பேடு மத்திய பேருந்து நிலையங்கள் அமைந்துள்ளதால் எப்பொழுதும் பேருந்து நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து பெருமளவில் பாதிக்கப்படுகிறது. இதனைத் தவிர்க்க காளியம்மன் கோயில் தெருவையும், பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் இணைக்க நெற்குன்றம் சாலையின் வழியாக புதிய இணைப்புச் சாலை அமைக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 05 | 82 | உத்தமர் காந்தி சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி லாரி நிலையம் தற்சமயம் வேறு இடத்தில் இருந்து இயங்கி வருவதால் அந்த இடத்தில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைக்கப்படும். மேலும், தேவைப்படும் இடங்களில் இடவசதியைக் கருத்திற்கொண்டு அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படும். |
| 06 | 85 | சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வியாபார இடம், வழிபாட்டுத் தலம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் இடம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு முறையே கீடிநகண்ட இடங்களில், தியாகராய நகர், மயிலாப்பூர், வாலாஜா சாலை மற்றும் சுவாமி சிவானந்தா சாலைகளில் பாதசாரிகளுக்கு நல்ல வசதிகள் அளிக்கும் வகையில் நடைபாதை வளாகங்கள் அமைக்கப்படும். |
| 07 | 89 | கொட்டிவாக்கம் மற்றும் பாலவாக்கம் கடற்கரைப் பகுதி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, நிலவடிவமைப்பாளரைக் கொண்டு கடற்கரை ஒழுங்குமுறை மண்டலப் பகுதி (Coastal Regulation Zone) வரைமுறைகளுக்கு உட்பட்டு நடைபாதைகள், ஒழுங்குபடுத்தப்பட்ட வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் சிறுவர் விளையாட்டுப் பகுதிகளுடன் அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். |
| 08 | 90 | நீலாங்கரை கடற்கரைப்பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, நில வடிவமைப்பாளரைக் கொண்டு கடற்கரை ஒழுங்குமுறை மண்டலப் பகுதி (Coastal Regulation Zone) விதிமுறைகளுக்கு உட்பட்டு நடைபாதைகள், ஒழுங்குபடுத்தப்பட்ட வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் சிறுவர் விளையாட்டுப் பகுதிகளுடன் மேம்படுத்தப்படும். |
| 09 | 93 | மெரினா கடற்கரை வழியாக கோட்டை இரயில் நிலையத்திலிருந்து பட்டினப்பாக்கம் வரையில் 7.00 கி.மீ நீளத்திற்கு புதிய மிதிவண்டி சுற்றுப் பாதை அமைக்கப்படும். |

மேற்குறிப்பிட்டுள்ள சிறப்பு மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் அறிக்கையும் (Feasibility Study) மற்றும் விரிவான திட்ட அறிக்கையும் (Detailed Project Report) தயாரிப்பதற்காக, TNUIFSL மூலமாக கலந்தரிதற்குரியவர்களை நியமிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **17.05.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **21.05.2013** அன்று தீர்மான எண்.**209/2013**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **21.05.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **21.05.2013** அன்று தீர்மான எண்.**245/2013**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/05248/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.338/2013 பொருள் எண்.29

**வருவாய்துறை – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–13 வரவு செலவு திட்ட அறிவிப்பு எண்.100 தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களை சிறப்பினமாக கருதி சொத்துவரி விதிப்பது – அரசுக்கு பிரேரணை அனுப்ப அனுமதி.**

சென்னை மாநகராட்சியின் 2012–13 ம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட அறிக்கையில் சொத்துவரி நிர்ணயிப்பதில் சிறப்பு வகை கட்டடங்களான உணவகங்கள், திரையரங்குகள், திருமணகூடங்கள், தனியார் மருத்துவமனைகள் போன்றவற்றிற்கு உள்ளது போல் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் (I.T.Park) மற்றும் தொழிற்கூடங்களையும் என்ன இனங்களில் கொண்டுவருவது என்பது பற்றி ஆய்வு செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் மன்றத்தில் அறிவிக்கப்பட்டது.(அறிவுப்பு எண்.100).

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு குடியிருப்பு அல்லாத வணிகப்பயன்பாடு என்ற பிரிவின் கீழ் சொத்துவரி விதிக்கும் நடைமுறையைத் தவிர்த்து தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சிறப்பு வகை கட்டடங்களாக கருதி கீழ்க்கண்டுள்ளவாறு மண்டலம் வாரியாக பட்டியலிடப்பட்டுள்ள வரி விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டு விகிதாச்சாரங்களின் அடிப்படையில் சொத்து வரியை நடப்பு நிதியாண்டு 2/2012–13 அரையாண்டு முதல் உயர்த்தி நிர்ணயிக்க மன்றத்தின் ஒப்புதல் பெற்று உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய சொத்து வரி விதிப்பு மற்றிய விவரங்களை அரசிதழ் மற்றும் நாளிதழ்களில் வெளியிட்டு இது குறித்து ஆட்சேபணை ஏதும் இருப்பின் அதன் விவரம் பெற்றும் மன்றத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று அரசுக்கு சமர்ப்பித்து ஆணை பெற்று இந்நடைமுறையை அமல்படுத்தலாம் என பரிந்துரைக்கப்பட்டது.

| **மண்டலம் எண்** | குடியிருப்பு அல்லாத வணிக பயன்பாட்டில் தற்போது நடை முறையிலுள்ள சொத்து வரி விகிதம் | சிறப்பு வகை கட்டடங்களின் பிரிவின் கீழ் தகவல் தொழில் நுட்ப கட்டிடங்களுக்கு திருத்தியமைக்கப்படவுள்ள சொத்து வரி விகிதம் | தற்போதுள்ள சொத்து வரி விகிதத்திலிருந்து உயர்த்தப்படவுள்ள சொத்து வரி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ரூ.4.43 முதல் ரூ.12.43 வரை | ரூ.6.65 முதல் ரூ.18.65 வரை | 50% |
| 2 | ரூ. 2.00 முதல் ரூ.3.75 வரை | ரூ.4.00 முதல் ரூ. 7.50 வரை | 100% |
| 3 | ரூ.1.20 முதல் ரூ.9.15 வரை | ரூ.4.00 முதல் ரூ.11.73 வரை | தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச சொத்து வரி விகிதமான ரூ.1.20 க்கு மேலுள்ள ஒவ்வொரு பைசாவிற்கும் 50% உயர்வு வழங்கி குறைந்த பட்ச தொகையான ரூ.4.00 உடன் சேர்த்து வசூலிக்கப்பட வேண்டும். |
| 4 | ரூ.3.00 முதல் ரூ.6.00 வரை | ரூ.6.00 முதல் ரூ. 12.00 வரை | 100% |
| 5 | ரூ.3.00 முதல் ரூ.9.00 வரை | ரூ.6.00 முதல் ரூ. 18.00 வரை | 100% |
| 6 | ரூ.3.00 முதல் ரூ.6.00 வரை | ரூ.6.00 முதல் ரூ. 12.00 வரை | 100% |
| 7 | ரூ.3.61 முதல் ரூ.9.93 வரை | ரூ.5.42 முதல் ரூ. 14.90 வரை | 50% |
| 8 | ரூ.3.00 முதல் ரூ.7.50 வரை | ரூ.9.00 முதல் ரூ. 22.50 வரை | 200% |

| | | | |
|---|---|---|---|
| 9 | ரூ.3.00 முதல் ரூ.9.00 வரை | ரூ.9.00 முதல் ரூ. 27.00 வரை | 200% |
| 10 | ரூ.3.00 முதல் ரூ.7.50 வரை | ரூ.9.00 முதல் ரூ. 22.50 வரை | 200% |
| 11 | ரூ.3.00 முதல் ரூ.6.00 வரை | ரூ.5.25 முதல் ரூ.10.50 வரை | 75% |
| 12 | ரூ.3.00 முதல் ரூ.11.25 வரை | ரூ.4.50 முதல் ரூ.16.88 வரை | 50% |
| 13 | ரூ.3.00 முதல் ரூ.7.50 வரை | ரூ.9.00 முதல் ரூ.22.50 வரை | 200% |
| 14 | ரூ.0.60 முதல் ரூ.3.00 வரை | ரூ.4.00 முதல் ரூ. 8.80 வரை | தற்போது நடைமுறையில் உள்ள குறைந்தபட்ச சொத்துவரி விகிதமான ரூ.0.60 க்கு மேலுள்ள ஒவ்வொரு பைசாவிற்கும் 100% உயர்வு வழங்கி குறைந்தபட்ச தொகையான ரூ.4.00 உடன் சேர்த்து வசூலிக்கப்பட வேண்டும். |
| 15 | ரூ.2.00 முதல் ரூ.4.00 வரை | ரூ.4.00 முதல் ரூ.8.00 வரை | 100% |

21.01.2013 அன்று நடந்த மாமன்றக் கூட்டத்தில் தீர்மான எண் 56/2013ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் வாயிலாக மாமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில் எண்.12 நாள் 27.03.2013 அன்று தமிழ்நாடு அரசிதழில் அறிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. மேலும் 28.03.2013 அன்று தமிழ் மற்றும் ஆங்கில உள்ளூர் செய்தித் தாள்களிலும் வெளியிடப்பட்டு பொருள் குறித்து ஆட்சேபணை ஏதும் இருப்பின் தெரியப்படுத்தலாம் என உரிய கால அவகாசம் அளிக்கப்பட்டது. இது குறித்து பொது மக்களிடம் இருந்து எவ்வித ஆட்சேபனையும் இது நாள் வரை பெறப்படவில்லை.

எனவே, இந்நிலையில் பொது மக்களிடமிருந்து இப்பொருள் குறித்து ஆட்சேபனைகள் ஏதும் பெறப்படாத நிலையில் மன்றத் தீர்மான எண்.56/2013 நாள் 21.01.13 ன் படி தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களை சிறப்பினமாக கருதி சொத்து வரியை உயர்த்தி நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சொத்துவரியினை 2/2012–13 முதல் அமல்படுத்தி வசூலிக்க அரசாணை கோர நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 239/2013ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.1.ந.க.எண்.இ1/02888/2013 (சிப்பம்–1)**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 21–5–2013 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.339/2013** **பொருள் எண்.30**

**மண்டலம் – 1 – "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" (சேமிப்பு நிதியில்) (Chennai Mega City Develoment Mission) சென்னை மாநகர பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – சிப்பம்–1 (24சாலைப்பணிகள்) வார்டு எண்.34,5,7,10,11 மற்றும் 12 – குறைந்த ஒப்பந்ததாரரான திரு.யு.பி.ராமையா அவர்களுக்கு பணியினை அளிக்க மன்றத்தின் அனுமதி.**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டு அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 360 சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் 2011–12ம் ஆண்டில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அவற்றின் தொடர்ச்சியாக தற்போது 2012 – 13 ஆம் ஆண்டில் சென்னை மாநகரிலும் மற்றும் சென்னை விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த சாலைகள் 1 முதல் 15 மண்டலங்களில் 280.83 கி.மீ. நீளமுள்ள 1189 சாலைகளை ரூ.366.23 கோடியில் மேம்படுத்த, அதற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.10.2012ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் திருவொற்றியூர் மண்டலத்தில் (மண்டலம் – 1) Grid-1 சேமிப்பு நிதியின் கீழ் 6.978 கி.மீ. நீளமுள்ள 24 சாலைகளில் 5.17 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. பணிக்காலம் 3 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. ஒரு சிப்பமாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

சிப்பம் 1 – 24 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 1ல் உள்ள 24 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி ரூ.5.01 கோடி ரூபாய்க்கான பணி மதிப்பிற்கான தோராய மதிப்பீட்டுத் தொகை 5.17 கோடிகள் இதற்கு 10.05.2013 அன்று ஒப்பம் கோரப்பட்டது.

ஒப்பந்த அறிவிப்பு 02.05.2013 நமது எம்.ஜி.ஆர். நாள் 03.05.2013 மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 10.05.2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. எம்.ரங்கநாதன் | 5,01,19,852.90 | 4,76,16,039.00 | (–) 5.00% குறைவு |
| 2 | மெசர்ஸ் எம்.எஸ்.சசி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 5,01,19,852.90 | 5,60,03,623.00 | (+) 11.74% அதிகம் |
| 3 | திரு. டி.ஜே.ஆறுமுகம் அன் கோ | 5,01,19,852.90 | 4,65,71,839.95 | (–) 7.07% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | திரு.ஆர்.ராமாராவ் | 5,01,19,852.90 | 4,62,43,312.50 | ( –) 7.73% குறைவு |
| 5 | திரு.யு.பி.ராமையா | 5,01,19,852.90 | 4,44,92,438.00 | ( –) 11.23% குறைவு |

**சிப்பம்– 1 (சேமிப்பு நிதி)**

1. திரு.யு.பி.ராமையா
2. தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணங்கள் 11.05.2013 அன்று திறக்கப்பட்டது. இவர்களது ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் சிப்பம் 1–ல் கலந்து கொண்ட திரு.யு.பி.ராமையா (வரிசை எண்.5) ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டார்.

**சிப்பம் 1 (சேமிப்பு நிதி)**

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.யு.பி.ராமையா | 5,01,19,852.90 | 4,44,92,438.00 | ( –) 11.23% குறைவு |

சிப்பம்–1 க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு.யு.பி.ராமையா அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு.யு.பி.ராமையா அவர்கள் 14.05.2013 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகை ரூ.4,44,92,438.00 லிருந்து விலைகுறைப்பு இயலாது என்று கடிதம் அளித்துள்ளார். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு அளித்த விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட ( –) 11.23% குறைவு ஆகும். சந்தை விலை ரூ.5,17,07,208. உடன் ஒப்பிடுகையில் (–) 13.50% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 1 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு.யு.பி.ராமையா அவர்களின் ஒப்பத்தொகை ரூ.4,44,92,438.00 ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரரது ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதை, கேபிள் பதிப்பதற்கான குழாய், சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட அதிகமாக உள்ளது.
3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 11.23% குறைவு ஆகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 13.50% விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான திரு.யு.பி.ராமையா அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 11.23% குறைவான ஒப்பத்தொகை ரூ.4,44,92,438.00க்கு பணியை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டு.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரில் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலம் சென்னை மாநகரம் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு.யு.பி.ராமையா அவரின் ஒப்பத்தொகை ரூ.4,44,92,438.00ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் மற்றும் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான மழைநீர் வடிகால்வாய்கள், நடைபாதை, கேபிள் பதிப்பதற்கான குழாய்,சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

4) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 11.23% குறைவு ஆகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 13.50% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திரு.யு.பி.ராமையா அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.4,44,92,438.00 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (–) 11.23% குறைவு ஆகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 13.50% விழுக்காடு குறைவாகும். ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம் –1 (சேமிப்பு நிதி)க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திரு.யு.பி.ராமையா அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.4,44,92,438.00 க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கான ஒப்பத்தினை திரு.யு.பி.ராமையா அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 11.23% குறைவான ஒப்பத்தொகை ரூ.4,44,92,438.00 க்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி பணி வழங்க நிலைக்குழு (பணிகள்) (ம) (வரி விதிப்பு) ன் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 208/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 238/2013,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.3.ந.க.எண். இ1/1606/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 21–5–2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.340/2013 **பொருள் எண். 31**

**<u>மண்டலம் – 3 – "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" (Chennai Mega City Development Mission) (சேமிப்பு நிதி – GRID I) சென்னை மாநகரப் பகுதி மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.</u>**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் சேமிப்பு நிதி பணிகள் மாதவரம் மண்டலத்தில், (மண்டலம்-3) 14.803 கி.மீ. நீளமுள்ள 95 சாலைகளில் ரூ.8.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 3 மாதங்கள் என நிர்ணயித்து ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. இப்பணிக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (சேமிப்பு நிதி) மூலம் மண்டலம் 3ல் உள்ள 95 சாலைகளை மேம்படுத்தும் பணி தோராய மதிப்பு ரூ.880.00 இலட்சங்கள்

ஒப்ப நாளான 10.05.2012 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

- திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ்
- திரு. K. துர்வாசுலு
- திரு.ஆர்.ராமாராவ்

மேற்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் திரு. ஆர். ராமாராவ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் BID CAPACITY தகுதி பெறவில்லை. மற்ற இரு ஒப்பந்ததாரர்களான திருவாளர்.சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் மற்றும் திரு. K. துர்வாசுலு அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 14.05.2013 அன்று திறக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் | 84965257.60 | 78108235.40 | (–) 8.07 குறைவு |
| 2 | திரு. K. துர்வாசுலு | 84965257.60 | 82782449.00 | (–) 2.57 குறைவு |

ஒப்பந்ததாரர் திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் **14.05.2013** நாளிட்ட கடிதத்தில் மேலும் விலைக்குறைப்பு வழங்க இயலாது எனத் தெரிவித்துள்ளார். இதன்படி திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை **ரூ.7,81,08,235.40** ஆகும். இவ்வொப்பத் தொகையானது **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட **(–)8.07%** விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் **(-) 9.35%** விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் **3** அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை **ரூ.7,81,08,235.40** ஆகும். குறைந்த பணிக்காலமான **3** மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கினைந்த சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதால் அதற்கான மூலப் பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளது.
3) இவ்வொப்பத்தொகையானது **2012–13**ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட **(–) 8.07 %** விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் **(-) 9.35 %** விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவிகிதத்தில் பணிகள் வழங்கலாம் என **29.10.2007** நாளிட்ட தீர்மான எண்.**512/2007**ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.
2) அதன்படி இவ்வொப்பத்தொகையானது **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட **(–)8.07%** விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)9.35% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான **ரூ.78108235.40/–** **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட **(–)8.07%** குறைவு மற்றும் சந்தைவிலையைவிட (-)9.35% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான **ரூ.78108235.40**க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர். சசி கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களுக்கு **2012–13**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட **(–)8.07** % குறைவான ஒப்பத்தொகை ரூ.**78108235.40**க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **17.05.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **21.05.2013** அன்று தீர்மான எண். **203/2013**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ''

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **21.05.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **21.05.2013** அன்று தீர்மான எண். **234/2013**,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.11.ந.க.எண்.பி1/3040/2013</u>**

**<u>முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21–5–2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.341/2013 **பொருள் எண்.32**

**<u>“சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்’’ Grant 2011-12 (Grid Savings) பகுதி – 32, கோட்டம் – 143, 144 மற்றும் 147–ல் உள்ள 65 சாலைகளுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களுக்கு ரூ.53285500.05க்கு பணியினை வழங்க அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம் XI–ல் – “சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்’’ Grant 2011-12 (Grid Savings) பகுதி – 32, கோட்டம் – 143, 144 மற்றும் 147–ல் உள்ள 65 சாலைகளுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு ஒப்பங்கள் கோரப்பட்டது.

<u>சிப்பம் 1 – (65 சாலைகள்)</u>

‘‘சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்’’ Grant 2011-12 (Grid Savings) பகுதி–32, கோட்டம் – 143, 144 மற்றும் 147–ல் உள்ள 65 சாலைகளுக்கு பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி. தோராய மதிப்பு ரூ.592.00 இலட்சங்கள்.

ஒப்பந்த அறிவிப்பு 25.04.2013 அன்று ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தமிழ் நாளிதழ் நமது எம்.ஜி.ஆர் மற்றும் 25.04.2013 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 10.05.2013 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**<u>சிப்பம்– 1</u>**

1. திரு. என்.வி. பாபு
2. திருவாளர். கே.சி.பி இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்
3. திரு. எம். ரங்கநாதன்
4. திரு. ஆர்.ராமா ராவ்
5. திருவாளர். எஸ்.எம். எண்டர்பிரைசஸ்
6. திருவாளர். ஆர்.கே அண்டு சன்ஸ்
7. திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ்
8. திரு. கே.கே ராகவன்
9. திரு.பி. பாஸ்கரன்
10. திருவாளர். ஜி.ஜி. இன்பராஸ்டரக்சர்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம்–1ல் கலந்து கொண்ட திரு. என்.வி. பாபு, திருவாளர். கே.சி.பி இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், திரு. எம். ரங்கநாதன், திரு. ஆர்.ராமா ராவ், திருவாளர். ஆர்.கே அண்டு சன்ஸ், திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திரு. கே.கே ராகவன் மற்றும் திருவாளர். ஜி.ஜி. இன்பராஸ்டரக்சர் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களாக நிர்ணயிக்கப்பட்டார்கள். திருவாளர். எஸ்.எம். எண்டர்பிரைசஸ் மற்றும் திரு.பி. பாஸ்கரன் அவர்கள் தகுதி அடையவில்லை. எனவே, தகுதி வாய்ந்த எட்டு ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 13.05.2013 அன்று திறக்கப்பட்டது.

**<u>சிப்பம் 1</u>**

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2012–2013ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. என்.வி. பாபு | 59149007.10 | 54767961.50 | ( –) 7.41% குறைவு |
| 2 | திருவாளர். கே.சி.பி இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் | 59149007.10 | 56209489.00 | ( –) 4.97% குறைவு |
| 3 | திரு. எம். ரங்கநாதன் | 59149007.10 | 53285605.00 | ( –) 9.91% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | திரு. ஆர்.ராமா ராவ் | 59149007.10 | 55746425.00 | ( –) 5.75% குறைவு |
| 5 | திருவாளர். ஆர்.கே அண்டு சன்ஸ் | 59149007.10 | 56244920.20 | ( –) 4.91% குறைவு |
| 6 | திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 59149007.10 | 53369998.90 | ( –) 9.77% குறைவு |
| 7 | திரு. கே.கே ராகவன் | 59149007.10 | 56242623.92 | ( –) 4.91% குறைவு |
| 8 | திருவாளர். ஜி.ஜி. இன்பராஸ்டரக்சர் | 59149007.10 | 56369837.00 | ( –) 4.70% குறைவு |

சிப்பம் 1–ற்க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு.எம்.ரங்கநாதன் அவர்கள் ( –) 9.91% குறைவாக ஒப்பம் கோரியுள்ளார். ஆனால் சிப்பம் –2லும் இதே ஒப்பந்ததாரர் ஒப்பத்தில் பங்கேற்று தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரராக மதிப்பீடப்பட்டுள்ளார். எனவே, இந்த ஒப்பந்தத்தை கணக்கில் கொண்டாலும் திரு.எம்.ரங்கநாதனின் ஒப்பம் பெறும் தகுதி குறைவாவதால் இந்த ஒப்பத்தில் தகுதி இழக்கிறார். எனவே, இரண்டாவது குறைந்த ஒப்பந்ததாரரான (L2) திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்கள் தகுதி பெறுகிறார்கள்.

சிப்பம்–1 க்கான இரண்டாவது குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்கள் 13.05.2013 நாளிட்ட கடிதத்தில் ( –) 9.77%லிருந்து ( –) 9.91% ஆக விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். இது ஏற்கனவே முதலாவது குறைந்த ஒப்பந்ததாரரான திரு.எம்.ரங்கநாதன் அவர்கள் வழங்கிய ஒப்பத் தொகைக்கு சமமாகும். திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.53285500.05 ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 9.91% விழுக்காடு குறைவாகும். சந்தை விலை ரூ.63061022.00 உடன் ஒப்பிடுகையில் (–) 15.50% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 11 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.53285500.05 ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 9.91% விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 15.50% விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரா திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (–) 9.91% குறைவான ஒப்பத்தொகை ரூ.53285500.05க்கு பணியை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவரின் ஒப்பத்தொகை ரூ.53285500.05 ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் மற்றும் விரிவாக்க பகுதிகளில் ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3) இவ்வொப்பத்தொகையானது 2012–13ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (–) 9.91% விழுக்காடு குறைவாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 15.50% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.53285500.05 2012–13ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (–) 9.91% குறைவு மற்றும் சந்தைவிலையைவிட (–) 15.50% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்–1க்கு குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.53285500.05க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண்.248/2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.14.ந.க.எண்.அ2/2335–பி3/2013(ம.ஓ–1)**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 21.05.2013நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.347/2013 **பொருள் எண்.38**

**மண்டலம்–14–"சென்னைபெருநகர வளர்ச்சித் திட்டம் (Chennai Mega City Develoment Mission) சென்னை விரிவாக்கப்பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது –சிப்பம்–3(பி3) ஒப்பந்ததாரான திரு.ஆர்.தாமஸ் அய்யாதுரை அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்'' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலலமச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் பெருங்குடி மண்டலத்தில், (மண்டலம்–14) 16.06 கி.மீ. நீளமுள்ள 40 சாலைகளில் ரூ.37.17 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது.

இதன்படி கோட்டம் 188 –ல் 14 சாலைகளுக்கு ரூ. 1283.26 லட்சங்களுக்கு ஒரு சிப்பமாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு ஒப்பம் பெறாத காரணத்தினால் நான்காவது முறையாக சிப்பம்3ஐ, சிப்பம்3(A), (தார்சாலை பணி, தெருவிளக்கு, தெருபலகை அமைக்கும் பணி) எனவும் சிப்பம் 3(B) ( மழைநீர் கால்வாய், நடைபாதை, கேபிள் பதிப்பதற்கான குழாய் அமைக்கும் பணி) என இருபிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் சிப்பம் 3(A) (தார்சாலை பணி, தெருவிளக்கு, தெருபலகை அமைக்கும் பணி) வுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, உரிய அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 3(B) (மழைநீர் கால்வாய், நடைபாதை, கேபிள் பதிப்பதற்கான குழாய் அமைக்கும் பணி)க்கு நான்கு முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் எந்த ஒரு ஒப்பந்ததாரரும் பங்கேற்காத நிலையில் ஐந்தாவது முறையாக 3(B) ஐ ஒப்பந்தத்தையும் பிரித்து 29.10.2012 அன்று சிப்பம் 3(B1), 3(B2) மற்றும் 3(B3)என மூன்று பிரிவுகளாக மறு ஒப்பம் கோரப்பட்டது.

சிப்பம் 3(B3)– 5 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

இந்த சிப்பம் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 14, கோட்டம் 188ல் உள்ள 5 சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் நடைபாதை பணிகள்அமைக்க ஒருங்கிணைந்த சாலை வளர்ச்சி திட்டப்பணிகள் கீழ் எடுக்கப்பட்ட பணியாகும். இதன் மதிப்பீடு ஆகும் செலவினத் தோராய மதிப்பு ரூ.229.28 இலட்சங்கள் ஆகும்.

மேற்படி ஐந்தாவது முறையாக 3–பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2முறை ஒப்பந்ததாரர் எவரிடமிருந்தும் பெறப்படாத நிலையில் மீண்டும் மேற்கண்ட சிப்பம் 3(B3)ஐ ஆறாவது முறையாக 23.11.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 23.10.2012 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு.

**சிப்பம்** 3(B3)

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2011–2012ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.ரங்கநாதன் | 2,29,30,674.68 | 2,86,34,786/– | (+) 24.88% |
| 2. | எஸ்.பி.பில்டர்ஸ் | 2,29,30,674.68 | 3,31,84,513/– | (+) 42.72 % |

சிப்பம்–3(B3) கான ஒப்பந்ததாரர் திரு.ஆர்.ராமா ராவ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு. எம்.ரங்கநாதன் அவர்கள் **03.12.2012** நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையிலிருந்து விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். திரு. எம்.ரங்கநாதன் அவர்களின் ஒப்பத்தொகை ரூ. **2,86,34,786/–** ஆகும். இவ்வொப்பத்தொகையானது **2011–12**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **24.88**% விழுக்காடு அதிகமாகும். மேலும் **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **10.88** % விழுக்காடு அதிகமாகும். ஆனால் இந்த ஒப்ப தொகை மிகவும் அதிகமாக இருந்ததால் திரு . எம்.ரங்கநாதன் அவர்களை மேலும் விலைக்குறைப்பு செய்ய அழைக்கப்பட்டது. அதற்கு அவர் குறைக்க இயலாது என்று கூறியதாலும் பிரிகாஸ்ட் (precast) முறையில் மழைநீர் வடிகால் பணிகள் செய்வதற்கு வேறு எந்த ஒப்பந்ததாரரும் முன்வராததால் இதை cast-in-situ முறையில் செய்ய ஆணைகள் பெறப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இதன்படி இந்த 5 சாலைகளுக்கும் ஆன மொத்த மதிப்பீடு ரூ. **228.60** லட்சம் ஆகும். இதற்கு **05.04.2013** அன்று மறு ஒப்பம் கோர தீர்மானிக்கப்பட்டது.

மறு ஒப்ப நாளான **05.04.2013** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**<u>சிப்பம்</u>** 3(B3)

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2011–2012ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராமாராவ் | **2,28,52,953.95** | **2,69,11,250/–** | (+) **17.76**% |
| 2 | திரு.ஆர்.தாமஸ் அய்யாதுரை | **2,28,52,953.95** | **2,80,81,220/–** | (+) **22.88**% |

சிப்பம்–3(B3) க்கு குறைந்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.ராமாராவ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு.ஆர்.ராமாராவ் அவர்கள் நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையிலிருந்து விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். திரு.ஆர்.ராமாராவ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**2,69,11,250/–** ஆகும். இவ்வொப்பத்தொகையானது **2011–12**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **17.76** % விழுக்காடு அதிகமாகும். ஆகவே திரு . ஆர். ராமாராவ் அவர்களை மேலும் விலைக்குறைப்பு செய்ய அழைக்கப்பட்டது. அதற்கு அவர் குறைக்க இயலாது என்றும், தன்னால் இந்த வேலையை செய்ய தற்போது இயலாது என்றும் கூறியதால் இதற்கு **26.04.2013** அன்று மீண்டும் மறு ஒப்பம் கோர தீர்மானிக்கப்பட்டது.

மறு ஒப்ப நாளான **26.04.2013** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**<u>சிப்பம்</u>** 3(B3)

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2011–2012ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.தாமஸ் அய்யாதுரை | **2,28,52,953.95** | **2,77,42,382.00** | (+) **21.40**% |

சிப்பம்–3(B3) கான ஒப்பந்ததாரர் திரு. ஆர்.தாமஸ் அய்யாதுரை அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு. ஆர். தாமஸ் அய்யாதுரை அவர்கள் **15.05.2013** நாளிட்ட கடிதத்தில் ஒப்பத் தொகையிலிருந்து விலை குறைப்பு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே திரு.ஆர்.தாமஸ் அய்யாதுரை அவர்களின் விலை குறைப்பு ஒப்பத்தொகை ரூ. **2,76,22,934/–** ஆகும். இவ்வொப்பத்தொகையானது **2011–12**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **20.87** % விழுக்காடு அதிகமாகும். மேலும் **2012–13**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **11.38** % விழுக்காடு அதிகமாகும். இதற்கு மேலும் இவரால் விலை குறைப்பு செய்ய இயலாது ஏன்றும் கூறியுள்ளார்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் **14** அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். ஒப்பந்ததாரரான திரு.ஆர்.தாமஸ் அய்யாதுரை அவர்களின் ஒப்பத்தொகை ரூ **2,76,22,934/–**(ரூபாய் இரண்டு கோடியே எழுவத்துஆறு லட்சத்து இருபத்து இரண்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து நான்கு மட்டும்) ஆகும். இப்பணி விரிவாக்கப்பட்ட பகுதியில் இருப்பதாலும் , குறைந்த பணிக்காலமான **3** மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தையும் கருத்தில்

கொண்டால் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2. இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதைகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3. 2011–2012ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உட்புற சாலைகளுக்கானஒப்பங்கள்கோரப்பட்டன. இதற்கான மதிப்பீடுகள் 2011–2012 ஆம் ஆண்டில் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டவையாகும். ஒப்பந்தங்கள் 2011–2012 ஆண்டு விலைப்பட்டியலை விட(+) 20.87% அதிகமாக உள்ளது மேலும் 2012–13ஆம் ஆண்டு விலை பட்டியலை விட (+) 11.38% அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 12.14 % விழுக்காடு குறைவாகும்.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரரான திரு.ஆர்.தாமஸ் அய்யாதுரை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ 2,76,22,934/– 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+)20.87% அதிகம், 2012–13ஆம் ஆண்டு விலை பட்டியலை விட (+) 11.38 % அதிகமாகும் மற்றும் சந்தை விலையைவிட (–) 12.14% குறைவாக உள்ளது, ஆகவே ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்.3 (B3)க்கு குறைந்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.தாமஸ் அய்யாதுரை அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ. 2,76,22,934/–க்கு பணியினை வழங்க சுற்றின்மூலம் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு. தாமஸ் அய்யாதுரை அவர்களுக்கு 2012–13ஆம் ஆண்டு விலை பட்டியலை விட (+) 11.38 % ஆதிகமாக உள்ள ஒப்பத்தொகைக்கான ரூ.2,76,22,934/–க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 213/2013, –ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“ ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 249/2013–ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.க.கு.ந.க.எண் அ8/1503/2013</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21 .05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**348/2013** பொருள் எண்:**39**

**<u>அரசாணை அமலாக்கம்</u>**

அரசாணை எண் **148,** நிதி ( கடன் மற்றும் முன்பணம் குழுமம்)த்துறை நாள் **04.05.2013**ல் (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்) துறை, நாள்.**04.05.2012**ல் பல்வேறுவிதமான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டிவிகிதம் **2013 – 2014** ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

FINANCE (LOANS AND ADVANCES CELL) DEPARTMENT

G.O.NO.148, Dated 4th May 2013

(Vijaya, Chithirai 21, Thiruvalluvar Aandu 2044)

INTEREST – Rate of interest on Loans and Advances sanctioned by the State Government – Interest rates for the year 2013 – 2014 – Orders – Issued.

---

READ – the following papers:

G.O. Ms. No.203, Finance (Loans and Advances Cell) Department, dated 08.06.2012.

===000===

**<u>ORDER:</u>**

Government direct that the rate of interest on various kinds of loans and advances by the State Government during the year 2013-14 shall be as shown below:-

| **Sl No.** | **Class of Loan / Advance** | | **Percent per annum for the year 2013 -2014** |
|---|---|---|---|
| **1.** | **Loans to State owned Industrial / Commercial Undertakings / Corporations, etc. including Financial Corporations and all other Local Bodies and Municipal Corporations.** | | |
| | (a) | Plan Schemes for development purposes | **10.50** |
| | (b) | Other Schemes | **11.50** |
| | (c) | For capital formation and development purposes | **11.00** |
| | (d) | For Working Capital Support | **13.50** |
| | (e) | For Ways & Means , advances including loans to cover cash deficits | **13.00** |
| | (f) | For Ways & Means advance to Tamil Nadu Civil Supplies Corporation Limited for Public Distribution System | **10.00** |

| **Sl No.** | **Class of Loan / Advance** | | **Percent per annum for the year 2013 -2014** |
|---|---|---|---|
| **2** | **Loans to Co-operative Institutions and Co-perative Banks like Land Development Bank** | | **10.00** |
| **3** | **Loans to Government Servants** | | |
| | **(i)** | **House Building Advance:** | |
| | | (a) For loans upto Rs.50,000/- | **5.50** |

| | | | |
|---|---|---|---|
| | | (b) For loans from Rs.50,001/- to 1,50,000/- | **7.00** |
| | | (c) For loans from Rs.1,50,001/- to 5,00,000/- | **9.00** |
| | | (d) Above Rs.5,00,000/- | **10.00** |
| | **(ii)** | **Conveyance Advance:** | |
| | | (a) For purchase of Motor car | **11.50** |
| | | (b) For purchase of Motor Cycle / Scooter | **9.00** |
| | | (c) For purchase of Bi - cycle | **5.50** |
| | **(iii)** | **Other personal Loans to Government Servants:** | |
| | | (a) For purchase of Computer | **10.00** |
| | | (b) Others | **10.00** |
| **4.** | **Other items:** | | |
| | Loans which are not covered in any specific category mentioned above | | **12.50** |
| **5.** | **Value of seized stock under Essential Commodities Act, 1955** | | **9.15** |
| **6.** | **Penal Interest** | | **2.50** |

2. The above rates will be applicable for all loans and advances being sanctioned during the year 2013-2014 and will have validity till the next revision is done
3. The rates of interest are general and will not apply to cases where reduced rates of interest have been sanctioned specially by the Government or where loans have been sanctioned by the Government free of interest. The Government may also sanction Ways and Means advances at special rates or interest taking into account, the cost of borrowing of the government.
4 The mobilization advances to Contractors for World Bank assisted projects wherein the standard bidding documents provide for exemption from paying of interest are however excepted from payment of interest.
5. The penal Interest on all overdue instalments of principal and interest will be at 2.50 per cent more than the normal rates of interest per annum.
6. Except in the case of loans to Government Servants, interest ion all cases unless specifically indicated otherwise should be paid every Calendar quarter on the outstanding balance.
7. Even at the stage of sanction of loan, in the sanction order, the period of repayment, rate of interest and schedule of repayment with dates shall be indicated. In case, it is a permanent loan, a specific mention of this fact should be made in the sanction order itself.

எனவே, அரசாணை எண் **148** நிதி **(**கடன் மற்றும் முன்பணம் குழுமம்**)**துறை நாள் **04.05.2013** யினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த நிலைக்குழு **(**வரி விதிப்பு மற்றும் நிதி**)**வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **21.05.2013** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **21.05.2013** அன்று தீர்மான எண். **243/2013**,ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.13.ந.க.எண்.சி1/3614/2013**

**முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.349/2013 **பொருள் எண். 40**

**மண்டலம்–13–பகுதி–39, வார்டு–179ல் தரமணி 100 அடி சாலையில் உள்ள மயான வளாகத்தில் உள்ள ஒரு சிறிய காலி குட்டையை மயான பூமியாக பயன்படுத்த அனுமதி**

வேளச்சேரி பகுதிவாழ் இஸ்லாமிய மக்கள் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் நேரடியாக அளித்த கோரிக்கையின்படி சென்னை மாநகராட்சி, மண்டலம்–13, பகுதி–39, வார்டு–179ல் முஸ்லீம் ஜமாத் கமிட்டி தங்களுக்கென்று தரமணி 100 அடி சாலையில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தங்கள் முஸ்லீம் சமுதாய மக்களை நல்லடக்கம் செய்ய ஒப்புதல் வேண்டி அவர்கள் அளித்த கோரிக்கையின் பேரில் 01.05.2013 அன்று மாலை 4.30 மணிக்கு ஆலோசனை கூட்டம் உதவி ஆணையர்(பொ) தலைமையில் நடைபெற்றது

ஆலோசனை கூட்டத்தின் போது ஜமாத் கமிட்டி, வேளச்சேரி தொகுதியில் தங்கள் முஸ்லீம் சமுதாயத்தினர் இறந்துவிட்டால் அவர்களை நல்லடக்கம் செய்ய அவர்களுக்கென்று ஒரு தனி இடம் இல்லை என்றும், 1980லிருந்து இது வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். வேளச்சேரியை சேர்ந்த இஸ்லாமிய மக்கள் தற்சமயம் இராயப்பேட்டை வரை சென்று இறந்தவர்களை நல்லடக்கம் செய்து வருகின்றனர் என்று மேற்கூறப்பட்ட கூட்டத்தில் தெரிவித்தனர்.

வேளச்சேரி தரமணி 100 அடி சாலையில் கோட்டம்–179ல் சர்வே எண்.150ல் ருத்ரபணிபூமி என்று வகைப்படுத்தப்பட்டுள்ள மயானத்தில் இந்து மற்றும் கிறிஸ்துவ மக்கள் எரிக்க புதைக்க இம்மயான பூமியை பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த மயான வளாகத்தில் ஒரு சிறிய காலி குட்டை (தாழ்வான பகுதி) உள்ளது. இதை சுற்றி சுற்றுச்சுவர் போடப்பட்டுள்ளது. இங்கு எந்தவித மயான பயன்பாடும் நடைபெறவில்லை.

இஸ்லாமிய சமுதாய மக்களின் கோரிகையை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் நேரடியாக காலி குட்டை பகுதியை கள ஆய்வு மேற்கொண்டு மயான பூமி பயன்பாட்டிற்காக வழங்கலாம் என்று தெரிவித்ததன் அடிப்படையில் இந்த காலி குட்டை பகுதியில் 50 சென்ட் இடத்தை முஸ்லீம் இனத்தவர் மயானத்திற்கு பயன்படுத்த வகைப்பாடு செய்வது பற்றி வார்டு குழு மண்டலம்–13ல் ஒப்புதல் வேண்டி சமர்பிக்கப்பட்டது. இக்கருத்துருவிற்கு 13வது வார்டு குழுவின் தீர்மான எண்.158, நாள்–14.05.2013ல் பரிந்துரை செய்துள்ளது.

மேற்குறிப்பிட்ட விவரப்படி, வேளச்சேரி தரமணி 100 அடி சாலையில் கோட்டம்–179, சர்வே எண்.150ல் ருத்ரபணிபூமி என்று வகைப்படுத்தப்பட்டுள்ள மயானத்தில் உள்ள காலி குட்டை பகுதியில் 50 சென்ட் இடத்தை முஸ்லீம் இனத்தவர் மயானத்திற்கு பயன்படுத்த வகைப்பாடு செய்ய நிலைகுழுக்கள் (பொது சுகாதாரம்) மற்றும் (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்டுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 16.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண்.51/2013,ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 17.05.2013 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 21.05.2013 அன்று தீர்மான எண். 204/2013–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/7848/2013**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.350/2013 **பொருள் எண்.41**

**தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

**22.05.2013** நாளிட்ட மன்றத்தீர்மானத்தின்படி சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கான **15.01.2013**ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | தலைமை பொறியாளர் | | |
| 2 | மைய நாள் | **15.01.2013** | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.**37400 – 67000** + தர ஊதியம் ரூ.**8900** | | |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | அ) கண்காணிப்பு பொறியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்,<br>ஆ) கண்காணிப்பு பொறியாளர் பதவியில் **2** ஆண்டு காலம் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>இ) தலைமை பொறியாளர் பொதுப்பணித்துறை அல்லது நெடுஞ்சாலைத்துறையிலிருந்து அயற்பணியில் நியமனம் | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம்<br>அரசாணை எண்.95, நநி(ம)குவ, துறை<br>நாள்:14.10.2012ன் படி புதியதாக<br>தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்<br>அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம்<br>(அ) தற்காலிக பணியிடம்<br>(ஆ) நிரந்தர பணியிடம் | –<br>–<br>–<br>–<br>–<br>– | 02<br>01<br>03<br>00<br>03<br>01 |
| | | 2. அயற்பணி அடிப்படையில்<br>நிரப்பப்பட்ட பணியிடம் | –<br>– | 02<br>00 |
| | | 3. 01.07.2012 முதல் 30.06.2013 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 00 |
| | | **4.** மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் | | |
| | | **5. 5** சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் | | |
| | | **நிகர காலிப்பணியிடம்** | **–** | **02** |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? இல்லையெனில் காரணம். | | –ஆம்– | |

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணிபுரியும் அலுவலர்களின் முதுநிலை பட்டியல் பின்வருமாறு.

| **வ. எண்** | **பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம்** | **கண்காணிப்பு பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள்** | **இரண்டாண்டு பணி முடிக்கும் காலம்** | **ஓய்வு பெறும் நாள்** | **மைய நாளில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் தற்போது வரை பணிபுரிந்துள்ள காலம்** | **குறிப்பு** |
|---|---|---|---|---|---|---|
| **01.** | வி.சி.ராஜசேகரன் | **22.09.2011** | **22.09.2013** | **30.04.2013** | **1** வருடம் **4** மாதங்கள் | அரசாணை (ப) எண். **12**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.**3**) துறை நாள் **09.01.2013**ல் வழங்கப்பட்ட |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | அரசாணையின்படி தனியருக்கு தற்காலிகமாக தலைமை பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு **06.02.2013** முதல் தலைமை பொறியாளர் (கட்டடம் மற்றும் பாலங்கள்) துறையில் பணியாற்றி **30.04.2013** அன்று வயது முதிர்வு ஒய்வில் சென்றுள்ளார். |
| 02. | திரு.ஜி.ரமேஷ் பணித்துறை. | 23.09.2011 | 23.09.2013 | 31.03.2014 | 1 வருடம் 4 மாதங்கள் | |
| 03. | திரு.ஆர்.சீனிவாசன் பாலங்கள் துறை | 23.09.2011 | 23.09.2013 | 30.04.2014 | 1 வருடம் 4 மாதங்கள் | |
| 04. | திரு.அ.வின்செண்ட் கட்டடத் துறை | 02.04.2012 | 02.04.2014 | 30.11.2013 | 11 மாதங்கள் | அரசாணை (2.ப) எண்.14, நாள்.08.03.2012ன்படி திருத்தியமைக்கப்பட்ட மூப்பு நிலை அடிப்படையில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் இளயவரான திரு.சீ.சார்லஸ் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 23.09.2011 ஐ அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்டு ள்ளது. |
| 05. | திரு.சீ.சார்லஸ் மழைநீர் வடிகால் துறை | 23.09.2011 | 23.09.2013 | 30.06.2013 | 1 வருடம் 4 மாதங்கள் | |
| 06. | திரு.கே.யதுகுலராவ் பேருந்து சாலைகள் துறை | 02.04.2012 | 02.04.2014 | 30.04.2013 | 11 மாதங்கள் | 30.04.2013 அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |
| 07. | திரு.ஜெ.வேணுகோபால் மழைநீர் வடிகால் துறை(தெற்கு) | 01.03.2013 | 01.03.2015 | 30.04.2014 | – | |
| 08. | திருமதி.ஆர்.சுதா நகர பொறியாளர் | 15.03.2013 | 15.03.2015 | 30.04.2013 | – | 30.04.2013 அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |
| 09. | திரு.அ.ஞானமணி திட்டம் மற்றும் ஆய்வு | 01.03.2013 | 01.03.2015 | 30.04.2013 | – | 30.04.2013 அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |
| 10. | திரு.கே.வரதராஜு இயந்திர பொறியல் துறை | 01.03.2013 | 01.03.2015 | 30.04.2013 | – | 30.04.2013 அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |

தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி இரண்டாண்டு காலம் பணி தகுதியினை கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணிபுரியும் அலுவலர்கள் எவரும் பெற்றிருக்கவில்லை.

மேற்படி பதவிகளுக்கு ஊட்டப்பதவியான கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் உள்ளவர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படின், இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வ. எண். | கண்காணிப்புப் பொறியாளரின் பெயர் | கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | தெரிவுப் பட்டியலில் சேர்க்கலாமா ? | தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம்(ஆட்சேபணை ஏதேனும் இருப்பின்) |
|---|---|---|---|---|
| **01** | திரு. வி.சி.ராஜசேகரன் | 22.09.2011 | இல்லை | அரசாணை (ப) எண். 12, நகராட்சி நிர்வாகம் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குடிநீர் வழங்கல் (மா.நா.3) துறை நாள் 09.01.2013ல் வழங்கப்பட்ட அரசாணையின்படி தனியருக்கு தலைமை பொறியாளராக தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டு 06.02.2013 முதல் தலைமை பொறியாளர் (கட்டடம் மற்றும் பாலங்கள்) பதவியில் பணியாற்றி **30.04.2013 அன்று வயது முதிர்வு ஒய்வில் சென்றுள்ளார். தனியர் மைய நாளில் பணியில் இருந்ததாலும், தலைமை பொறியாளர் பதவியில் தற்காலிக பதவி உயர்வு பெற்றுள்ளதாலும் ஊட்டப்பதவியில் இரண்டாண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம்.** |
| **02** | திரு.ஜி.ரமேஷ் | **23.09.2011** | அரசு எடுக்கும் முடிவுக்கு உட்பட்டது. | தனியர் பழைய மண்டலம்–5ல் விதிமுறைகளுக்கு மாறாக கட்டட வரைபட அனுமதி வழங்கியது மற்றும் தனியர் அலுவலகத்திற்கு தெரிவிக்காமல் அசையும் மற்றும் அசையா சொத்து வாங்கி நடத்தை விதிமுறைகளை மீறியது போன்ற காரணங்களுக்காக தனியர் மீது சென்னை மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை விதி 10(b)யின் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைய நிலுவையில் உள்ளது, (ஈ1/31164/2006, ஈ1/38272/2008 மற்றும் ஈ1/43236/2008). இந்த ஒழுங்கு நடவடிக்கையை தவிர்த்து, இவர் தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளார். தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. தனியர் கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில்(W.A.(MD).Nos.315, 355, 587, 869 and 826/2010 and 149/2011 and W.A.No.280 of 2011, dated:27.04.2011) பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் **அரசானை எண்(2ப).24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:12.04.2013ன்படி தனியருக்கு கருத்தியலாக கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டு கருத்தியலாக பதவி உயர்வு வழங்கபட்டுள்ளதின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் இவரை பட்டியலில் சேர்ப்பது குறித்தும், ஊட்டப்பதவியில் இரண்டான்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்தும் அரசின் பரிசீலினைக்காக அனுப்பலாம்.** |
| **03** | திரு.ஆர்.சீனிவாசன் | **23.09.2011** | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் இரண்டான்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| **04.** | திரு.அ.வின்சென்ட் | **23.09.2011** | ஆம் | மேலே வரிசை எண்.2ல் உள்ள திரு.ஜி.ரமேஷ், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது நிராகரிக்கப்படின், |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வரிசை எண்.4ல் உள்ள திரு.அ.வின்செண்ட், கண்காணிப்புப் பொறியாளர் அவரின் பெயரை, இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் இரண்டான்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசின் பரிசீலினைக்காக அனுப்பலாம். |

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவி மிகவும் பொறுப்புமிக்க பதவி என்பதால் இப்பதவியை நிரப்ப வேண்டிய அவசியம் கருதி தலைமை பொறியளார் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் இரண்டாண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து 2013–2014ஆம் ஆண்டிற்கான தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு பரிசீலிக்கலாம்.

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க கீழ்நிலை பதவியான கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் 2 ஆண்டுகள் முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை தளர்வு செய்து 2 ஆண்டுகள் பணித்தகுதியை நீக்கம் செய்திட வேண்டி சென்னை மாநகராட்சி பொறியியல் பணி விதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ள மன்றத் தீர்மானம் பெற்று அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அரசின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

எனவே கீழ்காணும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

(அ). தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் இரண்டாண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து 15.01.2013ஐ மைய நாளாகக் கொண்டு கீழ்கண்ட நபர்களைக்கொண்ட தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்.

| வரிசை எண். | பெயர் | தற்பொழுது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|
| 01 | திரு.வி.சி.ராஜசேகரன் | **22.09.2011 (அரசாணை(ப) எண்.12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:09.01.2013ன் படி தனியருக்கு தலைமை பொறியாளர்(கட்டடம் மற்றும் பாலங்கள்) பதவியில் தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டு 06.02.2013 அன்று பணியில் சேர்ந்து 30.04.2013 முதல் வயது முதிர்வு ஒய்வில் சென்றவர்).** |
| 02 | திரு.ஜி.ரமேஷ் | **23.09.2011 (இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள நிலையில் தனியர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் மீது பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின்படி இவருக்கு கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசானை எண்(2ப).24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:12.04.2013ல் கருத்தியலாக கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்தின் அடிப்படையில் தனியருக்கு கருத்தியலாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் தனியரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசின் பரிசீலினைக்காக அனுப்பலாம்.** |
| 03 | திரு.ஆர்.சீனிவாசன் | **23.09.2011** |
| 04 | திரு.அ.வின்செண்ட் | **02.04.2012 ( அரசாணை (2.ப) எண்.14, நாள்.08.03.2012ன்படி திருத்தியமைக்கப்பட்ட மூப்பு நிலை அடிப்படையில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் இளயவரான திரு.சீ.சார்லஸ் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 23.09.2011 ஐ அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.** |

(ஆ). மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு அடுத்த வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை தேர்ந்த இப்பெயர் பட்டியலிருந்து ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8900 என்ற ஊதிய விகிதத்தில் தலைமை பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத் தீர்மான எண்.350/2013, நாள்.22.05.2013ன்படி ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்படி மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவில் அரசாணை.(2ப). எண்.14, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:08.03.2012ன்படி கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு தயாரிக்கப்பட்ட 2011–2012ஆம் ஆண்டின் தெரிவுப்பட்டியலில் திரு.சீ.சார்லஸ், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் பெயர் திரு.அ.வின்சன்ட், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் அடுத்தப்படியாக மூப்பு நிலையில் இடம்பெறும்படி திருத்தம் செய்யப்பட்டதால் மேலே படிக்கப்பட்ட மன்றத் தீர்மானத்தின்படி தலைமை பொறியாளர் பதவிக்கு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.4ல் இடம்பெற்றுள்ள திரு.சீ.சார்லஸ், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் பெயர் மூதுநிலைப்படி திரு.அ.வின்செண்ட், கண்காணிப்புப்

பொறியாளர் அவர்களின் பெயருக்கு கீழ் இடம்பெற வேண்டியுள்ளது. ஆனால் திரு.அ.வின்சென்ட், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் பெயருக்கு பதிலாக திரு.சீ.சார்லஸ், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் பெயர் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது. எனவே தலைமை பொறியாளர் பட்டியலுக்கு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலில் கீழ்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. மன்றத் தீர்மானம் எண்.350/2013, நாள்:22.05.2013ல் பக்கம்–2, வரிசை எண்.4ல் இடம்பெற்றுள்ள திரு.சீ.சார்லஸ், கண்காணிப்புப் பொறியாளர் (பணியில் சேர்ந்த நாள்:23.09.2011) அவர்களின் பெயரை வரிசை எண்.5ல் இடம்பெற செய்தும், வரிசை எண்.5ல் இடம்பெற்றுள்ள திரு.அ.வின்சென்ட், அவர்கள் கண்காணிப்புப் பொறியாளராக கருத்தியலாக 23.09.2011 அன்று பணியில் சேர்ந்த தேதியை குறிப்பிட்டும் அவருடைய பெயரை வரிசை எண்.4ல் இடம்பெற செய்தும்.
2. மன்றத் தீர்மானம் எண்.350/2013, நாள்:22.05.2013ல் பக்கம் எண்–3ல் வரிசை எண்.4ல் இடம்பெற்றுள்ள திரு.சீ.சார்லஸ், கண்காணிப்புப் பொறியாளர் (பணியில் சேர்ந்த நாள்:23.09.2011) அவர்களின் பெயரை நீக்கம் செய்து, அவ்விடத்தில் திரு.அ.வின்சென்ட், கண்காணிப்புப் பொறியாளர் (கருத்தியலாக பணியில் சேர்ந்த நாள்:23.09.2011) அவர்களின் பெயரை இடம்பெற செய்தும்,
3. பக்கம் எண்–4ல் வரிசை எண்.4ல் இடம்பெற்றுள்ள திரு.சீ.சார்லஸ், கண்காணிப்புப் பொறியாளர் (பணியில் சேர்ந்த நாள்:23.09.2011) அவர்களின் பெயரை நீக்கம் செய்து, திரு.அ.வின்சென்ட், கண்காணிப்புப் பொறியாளர் (கருத்தியலாக பணியில் சேர்ந்த நாள்:23.09.2011) அவர்களின் பெயரை இடம்பெற செய்து திருத்தாணை வெளியிடப்பட வேண்டும், முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 06.06.2013 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

எனவே, இனம் 1, 2, மற்றும் 3ல் தெரிவித்துள்ளப்படி மன்றத் தீர்மானம் எண்.350/2013, நாள்:22.05.2013ல் திருத்தங்கள் மேற்கொள்ளுவதற்கும் பின் சென்னை மாநகர முனிசிபல் சட்டம்–1919 விதி.31அட்டவனை II (10)ன்படி மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு திருத்தாணை வெளியிடுவதற்கும், தலைமை பொறியாளர் பதவிக்கு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“மன்றப்பொருள் எண்.41 , தீர்மான எண்.350/2013ன்படி சென்னை மாநகராட்சி தலைமைபொறியாளர் பதவிக்கான பட்டியலுக்கு ஒப்புதல் பெறப்பட்டது, இதன் தொடர்ச்சியாக தலைமை பொறியாளர் பதவி உயர்வு முதுநிலைப்பட்டியலில் இடம்பெற்றுள்ள திரு.சீ.சார்லஸ் அவர்களுக்கு பதிலாக திரு.அ.வின்சென்ட் அவர்களின் பெயரை இடம்பெற செய்து திருத்தம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”**

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2 /52444/ 2012.**

**முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.350/2013 **பொருள் எண்.41**

**தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கான 15.01.2013ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | தலைமை பொறியாளர் | | |
| 2 | மைய நாள் | 15.01.2013 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8900 | | |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | அ) கண்காணிப்பு பொறியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்,<br>ஆ) கண்காணிப்பு பொறியாளர் பதவியில் 2 ஆண்டு காலம் பணி தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>இ) தலைமை பொறியாளர் பொதுப்பணித்துறை அல்லது நெடுஞ்சாலைத்துறையிலிருந்து அயற்பணியில் நியமனம் | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | – | 02 |
| | | அரசாணை எண்.95, நநி(ம)குவ, துறை நாள்:14.10.2012ன் படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம் | – | 01 |
| | | அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம் | – | 03 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | – | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | – | 03 |
| | | 2. அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்ட பணியிடம் | – | 01 |
| | | 3. 01.07.2012 முதல் 30.06.2013 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | – | 02 |
| | | 4. மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் | – | 00 |
| | | 5. 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் | – | 00 |
| | | **நிகர காலிப்பணியிடம்** | **–** | **02** |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ?<br>இல்லையெனில் காரணம். | –ஆம்– | | |

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணிபுரியும் அலுவலர்களின் முதுநிலை பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் திருவாளர்கள் மற்றும் பணிபுரியும் இடம் | கண்காணிப்பு பொறியாளர் பதவியில் சேர்ந்த நாள் | இரண்டாண்டு பணி முடிக்கும் காலம் | ஓய்வு பெறும் நாள் | மைய நாளில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் தற்போது வரை பணிபுரிந்துள்ள காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 01. | வி.சி.ராஜசேகரன் | 22.09.2011 | 22.09.2013 | 30.04.2013 | 1 வருடம் 4 மாதங்கள் | அரசாணை (ப) எண். 12, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.3) துறை நாள் 09.01.2013ல் வழங்கப்பட்ட அரசாணையின்படி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | தனியருக்கு தற்காலிகமாக தலைமை பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு **06.02.2013** முதல் தலைமை பொறியாளர் (கட்டடம் மற்றும் பாலங்கள்) துறையில் பணியாற்றி **30.04.2013** அன்று வயது முதிர்வு ஓய்வில் சென்றுள்ளார். |
| **02.** | திரு.ஜி.ரமேஷ் பணித்துறை. | **23.09.2011** | **23.09.2013** | **31.03.2014** | **1** வருடம் **4** மாதங்கள் | |
| **03.** | திரு.ஆர்.சீனிவாசன் பாலங்கள் துறை | **23.09.2011** | **23.09.2013** | **30.04.2014** | **1** வருடம் **4** மாதங்கள் | |
| **04.** | திரு.சீ.சார்லஸ் மழைநீர் வடிகால் துறை | **23.09.2011** | **23.09.2013** | **30.06.2013** | **1** வருடம் **4** மாதங்கள் | |
| **05.** | திரு.அ.வின்செண்ட் கட்டடத் துறை | **02.04.2012** | **02.04.2014** | **30.11.2013** | **11** மாதங்கள் | |
| **06.** | திரு.கே.யதுகுலராவ் பேருந்து சாலைகள் துறை | **02.04.2012** | **02.04.2014** | **30.04.2013** | **11** மாதங்கள் | **30.04.2013** அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |
| **07.** | திரு.ஜெ.வேணுகோபால் மழைநீர் வடிகால் துறை(தெற்கு) | **01.03.2013** | **01.03.2015** | **30.04.2014** | **–** | |
| **08.** | திருமதி.ஆர்.சுதா நகர பொறியாளர் | **15.03.2013** | **15.03.2015** | **30.04.2013** | **–** | **30.04.2013** அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |
| **09.** | திரு.அ.ஞானமணி திட்டம் மற்றும் ஆய்வு | **01.03.2013** | **01.03.2015** | **30.04.2013** | **–** | **30.04.2013** அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |
| **10.** | திரு.கே.வரதராஜு இயந்திர பொறியல் துறை | **01.03.2013** | **01.03.2015** | **30.04.2013** | **–** | **30.04.2013** அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். |

தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி இரண்டாண்டு காலம் பணி தகுதியினை கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணிபுரியும் அலுவலர்கள் எவரும் பெற்றிருக்கவில்லை.

மேற்படி பதவிகளுக்கு ஊட்டப்பதவியான கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் உள்ளவர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் நிரப்பப்படின், இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| **வ. எண்.** | **கண்காணிப்புப் பொறியாளரின் பெயர்** | **கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்** | **தெரிவுப் பட்டியலில் சேர்க்கலாமா ?** | **தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது மற்றும் தவிர்ப்பதற்கான காரணம் (ஆட்சேபணை ஏதேனும் இருப்பின்)** |
|---|---|---|---|---|
| **01** | திரு. வி.சி.ராஜசேகரன் | **22.09.2011** | இல்லை | அரசாணை (ப) எண். 12, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.3) துறை நாள் **09.01.2013**ல் வழங்கப்பட்ட அரசாணையின்படி தனியருக்கு தலைமை பொறியாளராக தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டு **06.02.2013** முதல் தலைமை பொறியாளர் (கட்டடம் மற்றும் பாலங்கள்) பதவியில் பணியாற்றி **30.04.2013 அன்று வயது முதிர்வு ஒய்வில் சென்றுள்ளார். தனியர் மைய நாளில்** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | **பணியில் இருந்ததாலும், தலைமை பொறியாளர் பதவியில் தற்காலிக பதவி உயர்வு பெற்றுள்ளதாலும் ஊட்டப்பதவியில் இரண்டாண்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம்.** |
| **02** | திரு.ஜி.ரமேஷ் | **23.09.2011** | ஆம் | தனியர் பழைய மண்டலம்–**5**ல் விதிமுறைகளுக்கு மாறாக கட்டட வரைபட அனுமதி வழங்கியது மற்றும் தனியர் அலுவலகத்திற்கு தெரிவிக்காமல் அசையும் மற்றும் அசையா சொத்து வாங்கி நடத்தை விதிமுறைகளை மீறியது போன்ற காரணங்களுக்காக தனியர் மீது சென்னை மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை விதி **10**(b)யின் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைய நிலுவையில் உள்ளது, **(ஈ1/31164/2006, ஈ1/38272/2008** மற்றும் **ஈ1/43236/2008).** இந்த ஒழுங்கு நடவடிக்கையை தவிர்த்து, இவர் தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளார். தனியர் மீது இன்றைய தேதியில் ஒழங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. தனியர் கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில்(W.A.(MD).Nos.315, 355, 587, 869 and 826/2010 and 149/2011 and W.A.No.280 of 2011, dated:27.04.2011) பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் **அரசானை எண்(2ப).24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:12.04.2013ன்படி தனியருக்கு கருத்தியலாக கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டு கருத்தியலாக பதவி உயர்வு வழங்கபட்டுள்ளதின் அடிப்படையில் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் இரண்டான்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசின் பரிசீலினைக்காக அனுப்பலாம்.** |
| **03** | திரு.ஆர்.சீனிவாசன் | **23.09.2011** | ஆம் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் இரண்டான்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| **04.** | திரு.சீ.சார்லஸ் | **23.09.2011** | | மேலே வரிசை எண்.**2**ல் உள்ள திரு.ஜி.ரமேஷ், கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது நிராகரிக்கப்படின், வரிசை எண்.**4**ல் உள்ள திரு.சீ.சார்லஸ், கண்காணிப்புப் பொறியாளர் அவரின் பெயரை, இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி வளர் நிலை பதவியில் பணிக்கால தகுதியினை தவிர பிற தகுதிகள் பெற்றுள்ளதாலும், தனியர் மீது இன்றைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தேதியில் எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இல்லை என்பதாலும் நிர்வாக நலன் கருதி ஊட்டப்பதவியில் இரண்டான்டு காலம் பணித்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதியிலிருந்து தளர்வு வழங்கி இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசின் பரிசீலினைக்காக அனுப்பலாம். |

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவி மிகவும் பொறுப்புமிக்க பதவி என்பதால் இப்பதவியை நிரப்ப வேண்டிய அவசியம் கருதி தலைமை பொறியளார் பணி விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் இரண்டாண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து 2013–2014ஆம் ஆண்டிற்கான தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு பரிசீலிக்கலாம்.

சென்னை மாநகராட்சியில் தலைமை பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்க கீழ்நிலை பதவியான கண்காணிப்புப் பொறியாளர் பதவியில் 2 ஆண்டுகள் முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை தளர்வு செய்து 2 ஆண்டுகள் பணித்தகுதியை நீக்கம் செய்திட வேண்டி சென்னை மாநகராட்சி பொறியியல் பணி விதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ள மன்றத் தீர்மானம் பெற்று அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அரசின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

எனவே கீழ்காணும் இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

(அ). தலைமை பொறியாளர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியில் இரண்டாண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை தளர்வு செய்து 15.01.2013ஐ மைய நாளாகக் கொண்டு கீழ்கண்ட நபர்களைக்கொண்ட தலைமை பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்.

| வ.எண் | பெயர் | தற்பொழுது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|
| **01** | **திரு.வி.சி.ராஜசேகரன்** | **22.09.2011**<br>**(அரசாணை(ப) எண்.12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:09.01.2013ன் படி தனியருக்கு தலைமை பொறியாளர்(கட்டடம் மற்றும் பாலங்கள்) பதவியில் தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டு 06.02.2013 அன்று பணியில் சேர்ந்து 30.04.2013 முதல் வயது முதிர்வு ஒய்வில் சென்றவர்).** |
| **02** | **திரு.ஜி.ரமேஷ்** | **23.09.2011 (இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள நிலையில் தனியர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின் மீது பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின்படி இவருக்கு கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க அரசானை எண்(2ப).24, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:12.04.2013ல் கருத்தியலாக கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்தின் அடிப்படையில் தனியருக்கு கருத்தியலாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் தனியரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசின் பரிசீலினைக்காக அனுப்பலாம்.** |
| **03** | **திரு.ஆர்.சீனிவாசன்** | **23.09.2011** |
| **04** | **திரு.சீ.சார்லஸ்** | **23.09.2011** |

(ஆ). மேற்படி தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு அடுத்த வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை தேர்ந்த இப்பெயர் பட்டியலிருந்து ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8900 என்ற ஊதிய விகிதத்தில் தலைமை பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும்.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2 /7849/ 2013</u>**

**<u>முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 21.05.2013 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.351/2013 பொருள் எண்.42

**<u>கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சியில் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு 01.02.2013ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | கண்காணிப்புப் பொறியாளர் | | |
| 2 | மைய நாள் | 01.02.2013 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ.37400 – 67000 + தர ஊதியம் ரூ.8700 | | |
